

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2000-2001)

(பதினோராவது பேரவை)

இருபத்து ஒன்பதாவது அறிக்கை

1 FEB 2001

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் .....)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை - 600 009.

பொருளடக்கம்

	பக்கம்
குழு உறுப்பினர்கள் (பதினோராவது பேரவை)	iii
அறிக்கை	v - vii
இணைப்பு-I	1 - 7
இணைப்பு-II	8 - 19

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பதினோராவது பேரவை)

மனுக்கள் குழு

(2000-2001)

(2000-ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் நாள் நியமனம் செய்யப் பெற்றது)

தலைவர்

1. திரு. பா.மு. முபாரக்,
அரசு தலைமைக் கொறடா.

உறுப்பினர்கள்

2. திரு. ஆ. இராசேந்திரன்(எ) தீரன்
3. திரு. மா. இராமச்சந்திரன்
4. திரு. டி. கருப்புசாமி
5. திரு. துரை சந்திரசேகரன்
6. திரு. கே. சுந்தர்
7. திரு. ஆர்.ஆர். சேகரன்
8. திரு. சி. ஞானசேகரன்
9. திரு. அ.ல. தங்கவேல்
10. திரு. ச. நாகரத்தினம்
11. திரு. ந. பாண்டுரங்கன்

செயலகம்

திரு. வெ. இராசாராமன் .. செயலாளர்

திருமதி பவானி சுப்பையா .. இணைச் செயலாளர்

திரு. க. சம்பத்ராசன் .. துணைச் செயலாளர்

திருமதி ந. மீனாட்சி .. சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(மனுக்கள் குழு - 2000-2001)

பதினோராவது பேரவை

இருபத்து ஒன்பதாவது அறிக்கை

முன்னுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 2000-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ஆம் நாளன்று நியமனம் செய்யப்பட்ட மனுக்கள் குழு தனது இருபத்து ஒன்பதாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறது.

குழுவின் கூட்டங்கள்

2-6-2000 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் இராமநாதபுரம், தேனி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலிருந்து செய்தித்தாள் அறிவிப்பு வாயிலாக மனுக்களைப் பெற்று, அவ்வாறு பெறப்பட்ட மனுக்களையும், அதற்கான துறையின் பதிலுரைகளையும் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அந்தந்த மாவட்டங்களில் கூடி ஆய்வு செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. அரசு தலைமைக் கொறடா மற்றும் மனுக்கள் குழுத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, டிசம்பர் திங்கள் 12, 13 மற்றும் 14 தேதிகளில் முறையே இராமநாதபுரம், தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் குழுவின் கூட்டங்களை நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

மனுக்கள் குழுவின் முடிவிற்கிணங்க, 13.12.2000 ஆம் நாளன்று தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் குழு கூடியது. அக்கூட்டத்தில் மனுக்கள் குழுவின் உறுப்பினர்களைத் தவிர, போடிநாயக்கனூர் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. அ. சுடலைமுத்து, பெரியகுளம் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எல். மூக்கையா மற்றும் குன்னூர் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எம். ரங்கநாதன் ஆகியோர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பஷீர் அகமது, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட மனுதாரர்களும் அம்மாவட்டத்திலுள்ள அரசுத் துறை அலுவலர்களும் விளக்கமளித்தனர்.

தேனி மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட மனுக்களில், பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 99 மனுக்கள், உரிய நடவடிக்கை எடுத்து அதன் மீதான அறிக்கை பெறும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில் 50 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவ்வாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மனுக்களில் 14 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. எஞ்சியுள்ள 36 மனுக்கள் குறித்து அளிக்கப்பட்ட அரசுத் துறைகளின் பதிலுரைகள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அவை படித்துப் பதிவு செய்யப்பட்டனவாகக் கருதப் பெறலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழுவின் பரிந்துரைகள் பற்றிய மனுக்களின் விவரங்கள் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு-II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குழுவின் பரிந்துரைகள்

குழு ஆய்வு செய்து பரிந்துரை வழங்கிய பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒருசில மனுக்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

1. மனு எண். 13826: வெள்ளையம்மாள்புரத்தில் குளிர்சாதன கிட்டங்கி கட்டுதல் குறித்து.

தேனி மாவட்டத்தில் ஓடைப்பட்டியை மையமாக வைத்து உற்பத்தி செய்யக்கூடிய திராட்சைப் பழங்களை பாதுகாப்பாக வைக்க குளிர்சாதனக் கிட்டங்கி அமைத்துத் தர வேண்டுமென்ற மனுதாரரின் கோரிக்கைக்கு, ஓடைப்பட்டியில் ஒரு குளிர்சாதனக் கிட்டங்கி அமைக்கப்படும் என சட்டமன்றத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள் என வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார். ஓடைப்பட்டியில் ஒரு குக்கிராமம்தான் வெள்ளையம்மாள்புரம். அங்கு கிட்டங்கி அமைக்க அரசு பரிசீலித்து வருவதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவரும், இதற்காக நடத்தவிருக்கும் கூட்டத்தில் இதனை அமைப்பதற்கான முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கையையும், துறையின் விளக்கத்தையும் ஆய்வு செய்த குழு, மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கான கூட்டத்தைக் கூட்டி நன்கு பரிசீலித்து விவசாயிகளுக்கு கிட்டங்கி அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்கிறது.

2. மனு எண். 14095: எச்.டி.சி.எம். பயிற்சி முடித்த 200 பேர்களுக்கு மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலுள்ள காலிப் பணியிடங்களில் கூட்டுறவுத் துறையில் நேரடிய நியமனம் செய்யக் கோருதல்.

பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இட ஒதுக்கீடு அடிப்படையில் எச்.டி.சி.எம். பயிற்சிக்கு விளம்பரம் மூலம் பயிற்சி முடித்த 200 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்குக் கூட்டுறவு வங்கியில் நியமனம் கொடுக்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கைக்கு, கூட்டுறவு இணைப் பதிவாளர், கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தவர் இல்லாத காரணத்தால் அவர்களுக்குரிய பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்ற அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கையையும், துறையின் விளக்கத்தையும் ஆய்வு செய்த குழு, கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் இனத்துவர்கள் ஒருவரும் இல்லாத காரணத்தால் அவர்களது பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டது என்பதைக் குழு அறிவதால், இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலனை செய்து, ஆணை பெற்று , ஏற்பட்டுள்ள காலியிடங்களை அவ்வின இளைஞர்களைக் கொண்டே நிரப்பும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்கிறது.

3. மனு எண். 13518: **அழகுப்பாறை அணையினை மராமத்து செய்யக் கோருதல்.**

வெள்ளத்தால் சேதமடைந்துள்ள அழகுப்பாறை அணையினை மராமத்து செய்வதற்கான மனுதாரரின் கோரிக்கைக்கு விளக்கமளித்த உதவிச் செயற் பொறியாளர், கிடைக்க வேண்டிய நிதி ஆதாரம் கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டு இந்த வேலை எடுத்துச் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கையையும், துறையின் விளக்கத்தையும் ஆய்வு செய்த குழு, விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டி அழகுப்பாறை அணையில் மராமத்துப் பணிகளை உடனடியாக நிறைவேற்றுமாறு பரிந்துரை செய்கிறது.

4. மனு எண். 13503: **ஜங்கம் சாதிச் சான்றிதழ் வழங்கக் கோருதல்.**

ஜங்கம் என்ற சாதிப் பிரிவினருக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்ற சான்றிதழை வழங்க வேண்டுமென்ற மனுதாரரின் கோரிக்கைக்கு விளக்கமளித்த உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்கள், ஜங்கம் சாதி பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தது. மேலும் மனுதாரரிடம் உரிய ஆதாரங்கள் ஏதும் இல்லாததால், எம்.பி.சி. சான்றிதழ் வழங்க இயலாது என்று தெரிவித்தார்.

மனுதாரரின் கோரிக்கையையும், துறையின் விளக்கத்தையும் ஆய்வு செய்த குழு, ஜங்கம் சாதிச் சான்றிதழ் வழங்குவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் தனி விசாரணை நடத்தி அரசுக்கு அனுப்பி பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்கிறது..

குழுவின் இவ்வறிக்கைக்கு 2001-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்றக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப் பெற்றது.

பா.மு. முபாரக்
தலைவர்
மனுக்கள் குழு.

சென்னை - 600 009.
நாள் : 24-01-2001.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

இணைப்பு-I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1.	13417	எம். பாண்டியன், தலைவர், தேனி மாவட்ட விவசாயிகள் சங்கம், பெரியகுளம்.	பருத்தி விவசாயத்தை தீவிரமாக்குதல் சம்பந்தமாக.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
தேனி மாவட்டத்தில் பருத்தி சாகுபடி குறியீடு 2000-2001 ஆம் ஆண்டிற்கு 10000 எக்டர் ஆகும். 1.4.2000 முதல் 30.11.2000 முடிய மொத்தம் 8425 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் மானாவாரியாக 5176 எக்டரிலும், இறவையாக 3249 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத்துறை மூலம் சாகுபடி குறியீட்டின் 10 சதம் சான்று பெற்ற தரமான விதைகள் விநியோகிப்பட வேண்டும். அதன்படி தேனி மாவட்டத்தில் இதுவரை 8108 மெ.டன். சான்று பெற்ற பருத்தி விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. விநியோகிக்கப்பட்ட விதைகள் யாவும் சான்று பெற்ற தரமான விதைகளாகும். இவ்விதைகள் யாவும் விதைச் சான்றளிப்புத் துறையின் ஆய்வுக்குட்பட்டு மிகுந்த கவனத்துடன் உற்பத்தி செய்யப்படுகின்றன. விதைகளின் முளைப்புத்திறன் ஆய்வு செய்யப்பட்டு தரமான விதைகளே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் தேனி மாவட்டத்தில் பருத்தி உற்பத்தியினை அதிகரிப்பதற்கான தீவிர பருத்தி பெருக்குத் திட்டம் மத்திய மாநில அரசு நிதி உதவியுடன் ரூ. 13,635 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பத்தாண்டுகளுக்குட்பட்ட பருத்தி ரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ. 1000 மானியமாக அனுமதிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்ட இனத்தில் 25 குவின்டால் பருத்தி ரூ. 25,000 மானியத்தில் விநியோகிக்க ஒதுக்கீடு பெறப்பட்டு 12.26 குவின்டால் சான்று பெற்ற பருத்தி விதை ரூ. 12,260 மான்யத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றிட வகை செய்திட ரூ. 5.50 லட்சம் ஒதுக்கீட்டில் 220 எக்டர் பரப்பில் விவசாயிகள் நிலங்களில் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் விரிவாக்க அலுவலர்கள் 30 நபர்களுக்கு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி ரூ. 15,000 நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டது. இதேபோன்று விவசாயிகளுக்கு தொழில் நுட்பப் பயிற்சி ரூ. 40,000 ஒதுக்கீட்டில் மாவட்டத்தில் 4 இடங்களில் நடத்தப்பட்டது. பருத்தி சாகுபடியில் நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்திட ரூ. 75,000 ஒதுக்கீட்டில் தெளிப்பு நீர்க் கருவிகளும், ரூ. 75,000 ஒதுக்கீட்டில் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகளும் மான்யத்தில் வழங்கப்பட உள்ளன. பருத்தி விவசாயிகளிடையே ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் கூற பயிற்சியுடன் கூடிய ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக செயல் விளக்கத் திடல்கள் ரூ. 1.70 இலட்சம் ஒதுக்கீட்டில் ஆண்டிப்பட்டி மற்றும் பெரியகுளம் வேளாண கோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்திட மான்ய விலையில் தெளிப்பான்கள் ரூ. 33,500 ஒதுக்கீட்டில் வழங்கிடத் தேவைப் பட்டியலிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திடும்பொழுது ஏற்படும் இடையின செலவிற்காக ரூ. 50,000 அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. (தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரின் கடித எண். தி1/1243/99, நாள் 31.10.2000).	தேனி மாவட்டத்தில் பருத்தி சாகுபடியை அதிகமாக்குவதற்கு எந்த அளவிற்கு நிதி தேவைப்படுகிறது என்ற உண்மை நிலையை வேளாண்மைத் துறை மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பேசி, அவர் மூலம் அரசுக்குக் கருத்துரு அனுப்பி, அதிக நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2.	13826	எம். பாண்டியன், தலைவர், தேனி மாவட்ட விவசாயிகள் சங்கம், பெரியகுளம்.	வெள்ளையம்மாள்புரத்தில் குளிர்சாதன கிட்டங்கி கட்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மதுரை விற்பனைக் குழு சார்பாக குளிர்சாதன கிட்டங்கி கட்டுவதற்கு 1995 ஆம் ஆண்டு வெள்ளையம்மாள்புரம் பொதுமக்கள் 0.81.00 உறக்டேர் நிலத்தை வழங்கினார்கள். கடுமையான விலை வீழ்ச்சி அடையும்போது பழங்கள் மற்றும் காய்கறிகளை இருப்பு வைத்து விலை உயரும் காலங்களில் நல்ல விலையில் விற்பனை செய்யலாம் எனபதைக் கருத்தில் கொண்டு வெள்ளையம்மாள்புரம் பொதுமக்கள் 0.81.00 உறக்டேர் நிலத்தை வழங்கியுள்ளனர். 20.11.95ல் குளிர்சாதன கிட்டங்கி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்து அதற்கான திட்ட அறிக்கையினை வேளாண்மை விற்பனை இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 18.6.99ம் நாள் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வெள்ளையம்மாள்புரம் விவசாயிகள் மற்றும் தேனி மாவட்ட விவசாயி சங்கத்தினர், மாவட்ட ஆட்சித் தலைவர் தேனி அவர்களிடம் குளிர்சாதன கிட்டங்கி அமைக்க கோரினர். மாவட்ட ஆட்சியர், தேனி அவர்கள் குளிர்சாதன கிட்டங்கி அமைப்பது குறித்து வேளாண்மை விற்பனை இயக்குநர்	மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கான கூட்டத்தை கூட்டி நன்கு பரிசீலனை செய்து, விவசாயிகளுக்கு கிட்டங்கி அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

அவர்களுக்கு எழுதி மேல் நடவடிக்கை கோரினார். வெள்ளையம்மாள்புரத்திற்கு அருகில் உள்ள சின்னமனூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாக 12.75 ஏக்கர் நிலம் உள்ளது. 1999ஆம் வருடம் டான்கோப் சின்னமனூர், ஒடைப்பட்டி மற்றும் வெள்ளையம்மாள்புரம் பகுதிகளில் திராட்சைக் கொள்முதல் செய்ய சின்னமனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட அலுவலக வளாகத்தில் ஒரு பகுதி ஒதுக்கி எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. ஆனால் டான்கோப் நிறுவனம் ஒடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம் பகுதிகளுக்கு வருகை தந்து திராட்சை பழங்களை ஆய்வு செய்து கொள்முதல் செய்யவில்லையென்று சென்று விட்டார்கள்.

இந்த வருடம் தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சின்னமனூருக்கு அருகில் உள்ள ஒடைப்பட்டியில் ஒரு குளிர்சாதன கிட்டங்கி அமைக்கப்படுமென தெரிவித்துள்ளார்கள். ஒடைப்பட்டி கிராமத்தின் குக்கிராமம்தான் வெள்ளையம்மாள்புரம். சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் குளிர்சாதன கிட்டங்கி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. (தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரின் கடித எண். தி.1/1243/99, நாள் 31.10.2000).

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3.	14095	பழனிச்சாமி, செயலாளர், ஆதிதிராவிடர் நகர், தி.மு.க. கிளை, 155, கலைஞர் நகர், ஜெயமங்கலம் அஞ்சல், பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.	எச்.டி.சி.எம். பயிற்சி முடித்த 200 பேர்களுக்கு மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் உள்ள காலிப் பணியிடங்களில் கூட்டுறவுத் துறையில் நேரடி நியமனம் செய்ய கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
தேனி மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கி இன்னும் துவங்கப்படாமல் உள்ளது. அவ்வாறு துவங்கும்போது மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று விதிமுறைகளின்படி தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (தேனி மண்டல இணைப் பதிவாளரின் கடித எண். ந.க.1318/2000/நு.கூ, நாள் 31.10.2000).	கூட்டுறவு வங்கிகளில் எம்.டி.சி.எம். (Higher Diploma in Co-Operative Management) பயிற்சி பெற்ற ஆதிதிராவிட, மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரும் இல்லாத காரணத்தால் அவர்களுக்குரிய பதவி இடங்கள் நிரப்பப்படாமல் இருந்தது எனவும், அதை நிரப்ப வேண்டுமென்ற அடிப்படையில்தான் 200 இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது என்று குழு அறிகிறது. எனவே, இதனை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலனை செய்து, ஆணை பெற்று, ஏற்பட்டிருக்கும் காலியிடங்களை அந்த இன இளைஞர்களைக் கொண்டு நிரப்பும் வகையில் நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4.	13899	ஜி. பால்ராஜ், தலைவர் (பொறுப்பு), சிறறூராட்சி மனறம், முத்துவாபுரம், தேனி மாவட்டம்.	வழித்தடத்தில் இயங்கும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்கக் கோருதல் மற்றும் கம்பம்-முத்துலாபுரம் கூடுதல் நடைகள் இயக்கக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
கம்பம்-முத்துலாபுரம் வழித்தடத்தில் தற்போது இயங்கும் பேருந்துகளில் உள்ள வேலைகளை பார்த்து பயனத்ததை இன்றி இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பழைய பேருந்துகளை மாற்றி, நல்ல பேருந்துகள் இயக்கப்படும். முத்துலாபுரம் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 5 பேருந்துகளின் மூலம் 30 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. (திண்டுக்கல் தமிழநாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரைக் கோட்டம்-4) நிர்வாக இயக்குநரின் கடித எண். வணிகம்/திவ-4/2210, நாள் 10.10.2000).	கம்பம்-முத்துலாபுரம் வழித்தடத்தில் எந்நேரங்களில் பேருந்துகள் இயக்க வேண்டுமென்பது குறித்து மனுதாரரைக் கலந்து கொண்டு கிளை மேலாளரை வைத்து ஆய்வு செய்து விரைவில் நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5.	13419	எம். பாண்டியன், தலைவர், தேனி மாவட்ட விவசாயிகள் சங்கம், 86/1, தெற்குத் தெரு, தென்கரை, பெரியகுளம்.	வைகை அணையில் தூர் வாரக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
வைகை அணையானது 1959ல் கட்டி முடிக்கப்பட்டபொழுது இதன் உயரம் 71 அடியாகவும், கொள்ளளவு 6878 MCFT ஆகவும் இருந்தது. இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பரப்பு 16 சதுர கிலோ மீட்டர் ஆகும். 1983 ஆம் ஆண்டு வைகை அணை நீர்த்தேக்கத்தின் திறன் ஆய்வு செய்ததில் நீர்த தேக்கத்தில் வண்டல் படிந்து தேக்கத்தின் கொள்ளளவு திறன் 787 MCFT குறைந்து மொத்தக் கொள்ளவு 6091 MCFT எனத் தெரிந்தது. மனுவில் குறிப்பிட்ட பிரகாரம் படிந்துள்ள வண்டலை அகற்ற வேண்டுமாயின், அகற்றப்படும் மண் வரப்புகளை சுமார் 10 கி.மீ தளவி கொண்டுதான் வெளியேற்றப்பட இயலும். கொள்ளளவின் குறைந்துள்ள 787 MCFT அதாவது வண்டல் மண் அளவானது 2,28,85,148 M3 ஆகும். இதனை அகற்ற 1 M3 க்குத் தோராயமாக ரூ. 172.70 செலவாகும். இந்தச் செலவின் மீதம் வண்டலை அகற்றத தோராயமாக ரூ. 384 86 கோடி செலவாகும். இந்த வண்டல் மண்ணை வெறியேற்ற வைகை அணையில் தண்ணீர் இவ்வாத காலங்களில்தான் வெளியேற்ற இயலும். எனவே, மேற்படி வண்டலை வெளியேற்ற குறைந்தபட்ச செலவு ரூ. 384.66 கோடி செலவாகும் என்பதினால இந்த வண்டல் மண் வெளியேற்றம் தொடர்பாக வல்லுநர் ஆய்வு குழுவிற்குப் பரிந்துரை செய்யும்படி கோரப்பட்டுளளது. வண்டல் மண் அகற்ற எலம் மூலமாக குத்தகைக்கு விடலாம் என்ற கருத்தினையும் தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது. (வைகை அணை (நீ.வ.ஆ.அ.) உபகோட்டம செயற பொறியாளர் (பொ.ப.து.) ன கடித எண். 1787/2000/(21), நாள் 20.10.2000).	வைகை அணையில் தூர் வாருவது தொடர்பாக துறை ஆயந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
6.	13518	வி. சுப்புராயலு, தலைவர், நாட்டுப்புற விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம், வடகரை, பெரியகுளம்.	அழகுபாறை அணை மராமத்து செய்ய வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
அழகுப்பாறை அணைக்கால் மராமத்து பணி செய்ய போதிய நிதி ஆதாரம் தற்பொழுது பொதுப்பணித் துறையில் ஒதுக்கப்படவில்லை. மேலும், தற்பொழுது அணையில் தண்ணீர் சென்று கொண்டுள்ளதால் மராமத்துப் பணிகள் யாவும் செய்ய இயலாது. எனவே, வரும் மார்ச் 2001ல மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படும். (பெரியகுளம் வடிநில உபகோட்டம் (நீ.வ.ஆ.) (பொ.ப.து. மஞ்சளார்) செயறபொறியாளரின் கடித எண். 1304/2000/கோ.30, நாள் 25.9.2000).	விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டி அழகுப்பாறை அணையில் மராமத்துப் பணிகளை உடனடியாக நிறைவேற்றுமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
7.	14093	செயலாளர், ஆதிதிராவிடா நகர், ஜெயமங்கலம்.	வலதுபுறம் உள்ள குடியிருப்புக்கும் இடபுறம் உள்ள விளை நிலங்களுக்கும் இடையே வராக நதியின் குறுக்கே பாலம் கட்டக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மேற்படி பாலம் இத்துறைக்குச் சொந்தமான சாலையில் இல்லை எனபதாலும், குறிப்பிட்ட இடத்திலிருந்து சுமார் 500 கி.மீ. தொலைவில் மேற்புறமும், கீழ்ப்புறமும் (Upstream and down stream) எதுகனவே பால வசதி இருப்பதாலும், 50 குடும்பங்கள் மட்டுமே பயனடைய ரூ. 100 இலட்சங்கள செலவிடுவது அவசியமில்லை என்பதாலும் மனுதாரர் குறிப்பிட்டுளள இடத்தில் பாலம் கட்டுவது அவசியமற்று என அறியப்படுகிறது. (தேனி மாவட்ட (நெ.ஊ.ப.து.) கோட்டப் பொறியாளரின் கடித எண். ந.க.எண். 108/2000/இநி வ, நாள 24.10.2000).	வராக நதியின் குறுக்கே பாலம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
8.	13408	ம. கலைவாணி, 5வது வார்டு உறுப்பினர், முருகமலை நகர், எண்டப்புளி ஊராட்சி, இ. புதுக்கோட்டை கிராமம், பெரியகுளம் அஞ்சல், தேனி மாவட்டம்.	ஸஞ்சல் அம்மன் கோவில் இணைப்புச் சாலை அமைப்பது குறித்து.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
முருகமலை நகரிலிருந்து ஊஞ்சல் அம்மன் கோவில் சாலை கி.மீ. 0/0-1/6 நீளமுள்ள மண் சாலையாகும். இச்சாலையை மேம்பாடு செய்து, தார் சாலை அமைக்க சுமார் ரூ. 16 இலட்சம் செலவாகும். மேற்படி ரூ. 16 இலட்சத்தை நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கும்பட்சத்தில் கிராமச் சாலைகள் மூலம் மேம்பாடு செய்யலாம். (தேனி மாவட்டம், கிராமச் சாலைகள், உதவி கோட்டப் பொறியாளர் (நெ.)-ன் கடித எண். 215/2000/இ.நி.வ.தொ.ஆ., நாள் 18.11.2000).	ஊஞ்சல் அம்மன் கோவில் இணைப்புச் சாலை அவசியமான ஒன்றாக இருந்தால் நிதி ஒதுக்கீடு கோரி அதன் முன்மொழிவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விரைவில் அனுப்பி துரிதமாக சாலையமைக்க நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9.	13422	எம். பாண்டியன், தலைவர், தேனி மாவட்ட விவசாயிகள் சங்கம், 86/1, தெற்குத் தெரு, தென்கரை, பெரியகுளம்.	சோத்துப்பாறை-அகமலை சாலை அமைப்பது சம்பந்தமாக

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
சோத்துப்பாறை-அகமலை (வழி) கன்னக்கரை சாலை கி.மீ. 0/0-5/0 வரை தார்ச் சாலை அமைத்து வேலை முடிவுற்றது. மேலும் அதே சாலையின் தொடர்ச்சியாக 1998-99 ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டு, கி.மீ. 5/0-8/2 வரை தார்ச் சாலை அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. விரைவில் முடிக்கப்படவுள்ளது. கி.மீ. 8/2 க்கு பிறகு 5 கி.மீட்டர்கள் வனத் துறையைச் சேர்ந்த நிலப்பகுதியாக உள்ளது. மக்கள் நடக்கும் நடைபாதையாகவும் மற்றும் விளைபொருள்கள் குதிரை மூலமாகவும், கழுதை மூலமாகவும் அகமலையிலிருந்து சோத்துப் பாறைக்குக் கொண்டு வரப்படுகிறது. இந்த நடைபாதையை தார்ச் சாலையாக மாற்ற கி.மீட்டருக்கு ரூ. 40 லட்சம் வீதம் ரூ. 200 லட்சம் தேவைப்படும். இந்த சாலையமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்திலும், வனத்துறையின் அனுமதி கிடைக்கும் பட்சத்திலும் இத்துறையின் மூலம் நிறைவேற்றப்படும். (தேனி மாவட்டம், கிராமச் சாலைகள், உதவி கோட்டப் பொறியாளர் (நெ.)-ன் கடித எண். 285/2000, இ.நி.வ.தொ.ஆ. நாள் 18.11.2000).	மாவட்ட வன அலுவலர் விரைந்து செயல்பட்டு, சோத்துப்பாறை-அகமலை சாலை அமைப்பது தொடர்பான திட்டத்தை நிறைவேற்ற உதவி செய்ய வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10.	13414	எம். பாண்டியன், தலைவர், தேனி மாவட்ட விவசாயிகள் சங்கம், பெரியகுளம்.	தேனி மாவட்டத்தில் குன்னூர் மணல் குவாரியைத் தவிர வேறு சிற்றோடைகளில் மணல் குவாரி ஏலம் விடாமல் நிரந்தர ஆணை வழங்கக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
தேனி மாவட்டம், பெரியகுளம் கோட்டத்தில் குன்னூர் கிராமத்தைத் தவிர வேறு கிராமங்களில் மணல் குவாரி ஏலம் எதுவும் விடப்படவில்லை. வரும் காலங்களில் மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். (பெரியகுளம் சார் ஆட்சியரின் கடித எண். ந.க.எண். 5208/2000/அ4, நாள் 5.10.2000).	குவாரி ஏலம் விடும்போது நிலத்தடி நீர் பாதிப்பு இல்லாத இடங்களில் அனுமதி வழங்கலாம் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11.	13427	எஸ்.ஆர். இளஞ்செழியன், பாரத ஸ்டேட் வங்கி, போடிநாயக்கனூர்.	போடிநாயக்கனூர் நகராட்சி நகரளவு வார்டு 2, நகரளவு எண். 4009/1ல் அனுமதியற்ற மனைப் பிரிவு முறைப்படுத்துதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மாவட்ட ஆட்சியரக கடிதத்துடனான திரு. எஸ்.ஆர். இளஞ்செழியன் என்பவரின் மனுவின் பேரில் கீழ்க்காணும் அறிக்கையினைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்: மனுவில் குறிப்பிட்டுள்ள அனுமதியற்ற மனைப் பிரிவு நிலம், அங்கீகாரம் பெற்ற நடுப்பட்டி கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தித் திட்டப் பரப்பில் சி1 சி1 40 அடி திட்டச் சாலை பகுதியில் அமைந்துள்ளது. மனுதாரர்கள் மனைப்பிரிவு ஒப்புதல் பெறாத நிலத்தினை தனித்தனி மனை இடங்களாக கிரையம் பெற்று பின்னர் மனைப் பிரிவு அனுமதி கோரி மனு செய்திருந்தனர்.	போடிநாயக்கனூர் நகராட்சி நகரளவு வார்டு-2 நகரளவு 4009/12 அனுமதியற்ற மனைப் பிரிவை முறைப்படுத்த சட்ட விதிகளுக்குட்பட்டு அதற்கேற்றபடி வழிமுறைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

அ) புகார் மனுவில் நானும் மற்றும் வங்கி ஊழியர்கள் 19 பேர்களும் சேர்ந்து என குறிப்பிடும் மனுதாரர் அவர்கள் முன்னதாக அனுப்பியுள்ள மனைப் பிரிவு அனுமதி கோரும் மனுவில் மனுதாரர்களாக விலாசமிட்டுள்ள பட்டியலில் மூன்று வங்கி ஊழியர்கள் மட்டும் உள்ள அமைப்பினை தற்போது மாறுதலாக குறிப்பிட்டுள்ளார். ஆ) மனுதாரர் 1992 முதல் அரசின் அனைத்து நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டு நிலத்தில் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் செய்து முடித்து நகர் ஊரமைப்பு இயக்குநர் ஒப்புதல் பெறப்பட்டும், நகராட்சிக்கு ஒப்படை செய்ய வேண்டிய ஒதுக்கீடுகளை ஒப்புதல் செய்யப்பட்டது எனக் கோப்புகளில் காணும் உண்மை விபரங்களுக்கு மாறாக விவரம் அளித்துள்ளார். தொடர்ச்சியான பல நினைவூட்டுகளுக்குப் பின்னரும் மனுதாரர்களால் தான் ஒப்படை நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் 26.5.98ம் நாளிட்ட இயக்குநரக கடிதத்தில் மனைப்பிரிவு ஒப்புதலின்றி திருப்பப்பட்டதை மனுதாரர்களுக்கும் தெரிவித்தும், அனுமதியற்ற மனைப்பிரிவு என குறிப்பிடப்பட்ட கடிதம் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டும் மனைப்பிரிவு கோப்பு நடவடிக்கையில் இருந்து வந்துள்ளது. மேற்காணும் நடவடிக்கைகளுக்கு முரணாக மனுதாரர்கள் புகார் மனு பத்தி 1ல் அவதூறாக நகராட்சி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பதிலும் தராமல் காலம் தாழ்த்தி வந்தது எனக் குறிபபிட்டுள்ளனர். இ) சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 26.5.96ம் நாளிட்ட கடிதத்தில் மனைப்பிரிவு ஒப்புதலின்றி திருப்பப்பட்டும், மனுதாரருக்கு பல அறிவிப்புகள் அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் கால இடைவெளிக்குப்பின் மனுதாரர்களால் சாலை அமைப்பு வரைபட ஒப்புதலுக்கு முற்றிலும் மாறாகவும், குறைபாடுகளுடனும் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் இணைத்து அனுப்பப்பட்ட 16.10.98ம் நாளிட்ட மனுதாரர்களின் விண்ணப்பத்தின்பேரில் நடவடிக்கை முடிவு விவரம் அளித்து மனுவினை முழு வடிவில் மனைப்பிரிவு அனுமதி கோரும் புதிய மனுவாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. ஈ) மனுதாரர்கள் இதற்கிடையே அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்தல் அடிப்படையில் மீளவும் அனுமதி கோரி 3.9.1999ம் நாளிட்ட மனு அரசாணையில் குறிப்பிட்ட சங்கப்பதிவுடன் விண்ணப்பிக்க அறிவிக்கப்பட்டது. உ) அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்துதல் அரசாணையின்கீழ் அரசினால் வழங்கப்பட்ட பலதரப்பட்ட நிபந்தனை தளர்வுகளில் கால இடைவெளிக்கிடையே மனுதார்களால் 28.9.99ல் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்படுத்த கோரும் மனு பரிசீலிக்கப்பட்டது. இடைக்காலத்தில் துணை நில அளவை முடிக்கப்பட்டு நகரளவை பதிவுகள் நகராட்சிக்கு கிடைக்கப் பெறாத நிலையிலும், பயிர் செய் நிலங்களாக பள்ளப் பகுதிகளாக இருந்த மனைப் பிரிவு நிலம் தண்ணீர் தேக்கத்தினால் நில அளவை செய்ய இயலாத தழலிலும் 1) சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண். 22121/93/எல்.எ.1, நாள் 21.1.93 கடிதப்படி நகராட்சியால் பராமரிக்கப்படும் அணுகுச்சாலை பிரஸ்தாப மனைப்பிரிவு நிலத்திற்கு இல்லாததை குறிபபிட்டு மனுதாரருக்கு திருப்பப்பட்டுள்ளது. 2) மீண்டும் மனை உட்பிரிவு அனுமதியாக கோரிக்கையை மாற்றி சமர்ப்பித்த மனு வரி விதிப்பு செய்து சமர்ப்பிக்க அறிவித்து 24.8.94 நாளிட்ட 9849/92/எப்.1, கடிதத்தின்படி மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 3) மனுதாரர்களால் மீளவும் மனைப்பிரிவு அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனு, சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம் 4691/95/எல்.எ1, நாள் 20.3.95ன்படி நன்செய் நில உபயோகம் அரசு வழக்கறிஞர் கருத்துரை திட்டச் சாலை ஒப்படைப்பு விவரம் உள்ளிட்ட ஆறு காரணங்கள் குறிப்பிட்டு, குறைபாடுகளுக்காக மனுதாரருக்கு திரும்ப அனுப்பப்பட்டுள்ளது. 4) கால இடைவெளிக்குப்பின் மனுதார்களால் 30.6.95ல் சமர்ப்பிக்கப்பட்ட மனு சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் 23.2.96ம் நாளிட்ட 38650/95/எல்.1, கடிதத்தில் பிரஸ்தாப மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு வரைபடம் மட்டும் ஒப்புதல் செய்யப்பட்டு அதனை நகராட்சிக்குத் தானமாக ஒப்படைப்பு செய்து தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்த பின்னரே மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம் எண்ணிடப்பட்டு அனுப்பப்படும் என மனுதாரர்களுக்கு நகலிட்டு நகராட்சிக்கு அனுப்பப்பட்டது. மேற்காணும் ஒப்படைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர்கள் திருத்திய மனைப்பிரிவு அனுமதி கோரியதின்பேரில் பிரஸ்தாப மனைப்பிரிவின் பரப்பளவு மாற்றத்திற்கு வருவாய்த் துறையினர் சான்று பெற்று தெரிவிக்க இயக்குநர் அவர்களால் 4.1.97ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையினர் சான்று பெற்று மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை இறுதியாக 12.11.97ம் நாளிட்ட இயக்குநரக கடிதத்தில் 23.2.96ல் நாளிட்ட சாலை அமைப்பு வரைபடத்தில் திருத்திய வரைபடம் ஒப்புதல் செய்யப்பட்டு தான ஒப்படைப்பு செய்ய கேட்கப்பட்டுள்ளது. கால அவகாசம் பயன்படுத்தப்பட்டு நில அளவை பதிவு மதுரை அலுவலகத்தில் பெறப்பட்டும், மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தஸ்தாவேஜ் சாட்சியங்கள் சரிபார்க்கப்பட்டும், பின்கோப்புகளில் காணும் விவரங்கள் அடிப்படையாக கொள்ளப்பட்டும் இணைக்கப்பட்டுள்ள 23.8.2000 நாளிட்ட கடித நகலின்படி மனுதாரர்களுக்கு அரசாணை எண். 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, நாள் 3.6.99ல் காணும் வழிமுறைகள் எண். II(இ)ல் மனைப்பிரிவிற்கு பொதுச் சாலையுடன் இணைப்பு இருக்க வேண்டும் என்று வழிமுறைக்கு மாறாக முறையான அணுகுசாலை இணைப்பு இல்லாமல் உள்ளது. அங்கீகாரம் பெற்ற நடுப்பட்டி கிழக்கு விஸ்தரிப்பு திட்டச் சாலை சி1 சி1 (40 அடி) சாலையின் நேர்பாட்டிற்கு முரணாகவும் (மனையிடங்கள்) உத்தேச திட்டச் சாலையில் அமைபவையாகவும்) விரிவு அபிவிருத்தி திட்ட விதியின்படி திட்ட மாற்ற ஒப்புதல் பெறப்பட வேண்டிய நோவாகவும் உள்ளது. மேலும் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள தானப்பத்திரம் பொது ஒதுக்கீடு அளவுகள், துணை நில அளவை பதிவுகளில் காணும் எல்லை அளவுகளுக்கு முரணாக உள்ளது எனும் விவரங்கள் விளக்கமாக குறிப்பிடப்பட்டு முறைப்படுத்தல் பரிசீலனை செய்ய இயலாத விவரம் அளிக்கப்பட்டுள்ளது. (போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் கடித எண். ந.க.எண். 9681/99/எப்1, நாள் 31.8.2000).	

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12.	13436	தலைவர், வழக்கறிஞர் சங்கம், போடிநாயக்கனூர்.	போடிநாயக்கனூர் வழக்கு மன்றத்திற்கு அரசு கட்டிடம் கட்டித் தரவும், போடி நாயக்கனூர் வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறை மற்றும் நூலகம் அரசு கட்டிக் கொடுக்கவும், அதுவரை வழக்கறிஞர்களுக்கு தற்காலிகமாக செட் போடுவதற்கு நகராட்சி அனுமதி வழங்கவும் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
போடிநாயக்கனூர் நகராட்சிக்குச் சொந்தமான பயணியர் தங்கும் விடுதியை மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு வழங்கக் கோரி வரப்பெற்ற மதுரை மாவட்ட நீதிபதியின் 26.3.96ம் தேதிய டி.என். 4823 கடிதத்தின்படி, நகராட்சி பயணியர் தங்கும் விடுதி 14.10.96 முதல் நீதிமன்றத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதி நீதிமன்றம் தொடங்குவதற்கு நகராட்சி பயணியர் தங்கும் விடுதியை மட்டுமே கோரியிருந்தார் எனவும், நீதிமன்றம் கட்டுவதற்கு இடம் ஒதுக்கக் கோரியோ, கட்டிடம் கட்டித் தரக் கோரியோ கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. மேற்படி கட்டிடம் நீதிமன்றத்திற்கு 14.10.96 முதல் வாடகைக்கு விடப்பட்டதற்கும் மாத வாடகை ரூ. 5342/- நகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்டதற்கும் ஒப்புதல் வழங்கக் கோரி ந.க.எண். 3873/93/அ3, நாள் 13.11.98ல் கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு, பல்வேறு நினைவூட்டுகள் அனுப்பப்பட்டும், இதுகுறித்து நேரிடையாக சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டும் வாடகை நிர்ணயம் செய்துள்ளதற்கு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் நீதிமன்ற கூட்டடதிற்கு அருகில் தற்காலிகமாக அறை ஒன்று அமைத்துக் கொள்ள அனுமதி கோரி, தலைவர் வழக்கறிஞர்கள் சங்கம் அவர்களின் 20.2.98ம் தேதிய கடிதத்தில் கோரியபடி, நீதிமன்றக் கட்டிடத்திற்கு அருகில் 200 சதுரடி இடத்தில் பார் கவுன்சில் தற்காலிகமாக அமைத்துக் கொள்ளவும், அதற்கு நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ. 100/-க்காகவும் அனுமதி கோரி ந.க.எண். 3873/93/அ3/நாள் 22.7.98ல் கருத்துரு அனுப்பப்பட்டு பல்வேறு நினைவூட்டுகள் அனுப்பப்பட்டும் நேரிடையாக சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டும், வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒப்புதல் பெறப்பட்டவும் பார் கவுன்சிலிய் அமைத்துக் கொள்ள இடம் வழங்கப்படும். (போடி நாயக்கனூர் நகராட்சி ஆணையரின் கடித எண். 3873/93/அ3, நாள் 14.9.2000).	போடிநாயக்கனூர் மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறை கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தனிக் கவனம் செலுத்தி விரைவாக நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13.	13898	போ. உதயகுமார், பி.காம், 4வது வார்டு கவுன்சிலர், கோம்பை.	மணல் குவாரி ஏலம் விடத் தடை கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமம் புல எண். 3111ல் 0.77.0 ஹெக்டேரில் அமைந்துள்ள மணல் குவாரி, உத்தமபாளையம் வட்டத்தைச் சேர்ந்த திரு. முத்துராமலிங்கம் என்பவரால் 1999ம் ஆண்டு மணல் குவாரி ஏலத்தின்போது ஏலம் எடுக்கப்பட்டு, தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண். 54/99, நாள் 10.2.99ன்படி மூன்று ஆண்டு காலத்திற்கு, அதாவது 25.5.99 முதல் 24.2.2002 வரை குவாரி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி ஒடையில் மணல் கறைந்து விட்டபடியால் மனுதாரரின் விண்ணப்பத்தின்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்திலமாறறு ஏற்பாடாக கோம்பை கிராமம் புல எண். 3217, 3210 (0.20.5 ஏர்ஸ்) அரசு ஒடைப் புறம்புகலில் மணல் எடுத்துக் கொள்ள உரிமதாரரை தறகாலிகமாக மறு உத்தரவு வரும் வரையில் அனுமதித்தும், ச.எண். 3111ல் (0.27.0 ஏர்ஸ்) தென்னை மரங்கள் வைத்து, ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ள பகுதியில் 14.1.2000 முதல் மணல் எடுக்கக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. புகார் மனுதாரர் குறிப்பிட்டுள்ளதுபோல் வேறு ஒடைகளிலோ, புலங்களிலோ மணல் எடுக்கப்படுவதில்லை. மேலும், மணல் குவாரி மணல் எடுப்பதற்கு தகுதியான புலம் என்பதாலேயே மணல் எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்புலத்தில் மணல் அள்ளுவதால் இப்பகுதியில் நீர் ஆதாரம் எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை. இப்பகுதியில் திருட்டுத்தனமாகவோ, அனுமதியின்றி ஏனைய ஒடைகளிலோ மணல் அள்ளப்படுகிறதா என்பது கண்காணிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கும் மற்றும் கிராம உதவியாளர்களுக்கும் தக்க அறிவுரை வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதுவரை அவ்வாறான நடவடிக்கைகள் ஏதும் நிகழவில்லை. எனவே, இக்குவாரியின் ஏலத்தினை இரத்து செய்யவோ, வேறு நடவடிக்கை மேற்கொள்ளவோ தேவையில்லை. இம்மணல் குவாரியினை தவிர ஏனைய பகுதிகளில் மணல் எடுக்கப்படாமல் பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. (உத்தமபாளையம் வட்டாட்சியரின் கடித எண். ந.க.எண். 11322/2000/அ4, நாள் 15.9.2000).	இனிவரும் காலங்களில் விதிமுறைகளை மீறி மணல் குவாரி ஏலதாரர்கள் நடந்து கொண்டால் குவாரியின் ஏலம் இரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பினை வழங்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
14.	13503	எம். தட்சிணாமூர்த்தி, தலைவர், தேனி மாவட்ட ஜங்கம் சாதி சங்கம், பாரதியார் நகர், கம்பம்.	ஜங்கம் சாதிச் சான்று கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
உத்தமபாளையம் வட்டம், உத்தமபுரம் கிராமம், காளவாசல் தெருவில் குடியிருந்து வரும் (லேட்) மணி என்பவரின் இரண்டாவது மகள் அருள்ஜோதி என்பவருக்கு இந்து ஜங்கம் சாதிச்சான்று கோரி அன்னாரது மனைவி திருமதி விஜயா விண்ணப்பித்ததின்பேரில் மனுதாரர் இந்து ஜங்கம் வகுப்பைச் சோந்தவர் என்பதற்கு போதிய நிருபணங்கள ஏதும் இல்லாததாலும், பூக்கட்டும் பண்டாரம் என்ற சாதியைச் சார்ந்தவர் என்பதாலும், மனுதாரர் கோரிய ஜங்கம் ஜாதிச் சான்றிதழ வழங்க இயலாதென	ஜங்கம் சான்றிதழ் வழங்குவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் தனி விசாரணை நடத்தி அரசுக்கு அனுப்பி பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செயகிறது.

சா ரர்

உத்தமபாளையம் துணை வட்டாட்சியர் மனுவைத் தள்ளுபடி செய்துள்ளார். மனுதாரர் வட்டாட்சியருக்கு மீண்டும் பரிசீலனை செய்து ஜங்கம் சாதிச் சான்று வழங்கும்படி கோரி மேல்முறையீடு செய்து, கம்பம் பகுதி அல்லாத போடி போன்ற பிற பகுதியைச் சேர்ந்த சில ஆவணங்களுடன் மனு செய்துள்ளார். அதன்பேரில் உரிய விசாரணை மேற்கொண்டு அவர் ஆஜர்படுத்திய பத்திர நகல் ஆவணங்கள் அனைத்திலும் ஜங்கம ஜாதி (Jangama) விவசாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜங்கம் (Jangam) சாதி என குறிப்பிடப்படவில்லை. பண்டாரம் இனத்தில் லிங்காயத் என்ற பிரிவு உண்மையென்றும், அப்பிரிவு பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் வரிசை எண். 72ல் லிங்காயத் (Jangama) எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. மனுதாரர் திருமதி விஜயாவின் கணவரின் அண்ணன் திரு. தட்சிணாமூர்த்தி படித்த பள்ளியில் மனுதாரர் இந்து பண்டாரம் என ஜாதி பதிவு செய்யப்பட்டுள்ளது. திரு. தட்சிணாமூர்த்தி மற்றும் அவரது உறவினர்கள் வீர சைவப் பேரவையில் உறுப்பினர்களாக உள்ளார். வீர சைவம் என்ற ஜாதி பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மனுதாரர் இந்து ஜங்கம் ஜாதியைச் சார்ந்தவர் என்பதற்கான ஆவணங்கள் ஏதும் விசாரணையின்போது ஆஜர்படுத்தப்படுத்த வில்லை. மேலும், அவர் பூர்வீகம் எந்த ஊர், எந்த ஊரில் இருந்து குடி பெயர்ந்து வந்தார் என்பதற்கு எந்தவித ஆதார ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. ஜங்கம ஜாதி 1989ம் ஆண்டுக்கு முன் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இருந்துள்ளது. சாதிச் சான்று கோரி மனு செய்துள்ள திருமதி விஜயா தன் வகையிலோ , தனது கணவர் வகையிலோ இந்து ஜங்கம் என்று அந்த சமயத்தில் பெற்ற எந்தச் சாதிச் சான்றையும் ஆஜர்படுத்தவில்லை. மேலும் ஆவணங்கள் ஏதும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். செல்வி அருள் ஜோதிக்காக அவரது தாயார் திருமதி எம். விஜயா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின்பேரில், சென்னை உயர்நீதிமன்றம் டபிள்யு.பி. எண். 15735/2000, நாள் 18.9.2000-ல் பிறப்பித்த உத்தரவின்படி, உத்திரவு கிடைக்கப் பெற்ற இரண்டு வாரங்களில் மனுதாரரின் மனுவைப் பரிசீலனை செய்து தகுந்த ஆணைகள் பிறப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன் பேரில் திருமதி எம். விஜயாவின் பாதுகாவலரும், விஜயாவின் கணவரின் மூத்த சகோதரரும் தேனி மாவட்ட ஜங்கம் சமூகத் தலைவர் எனத் தெரிவித்துள்ள திரு. எஸ். தட்சிணாமூர்த்தி என்பவரை விசாரணை செய்ததில் அவரிடம் மனுதாரர் இந்து ஜங்கம் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதாரப்பூர்வமான ஆவணங்கள் ஏதுமில்லை எனத் தெரிவித்துள்ளார். பொதுவாக சாதிச் சான்று வழங்கும்போது 1950ம் ஆண்டுக்கு முந்தைய ஆவணங்களையும் மற்றும் அவர்கள் எங்கிருந்து குடிபெயர்ந்து வந்துள்ளார் என்பதைக் கருத்தில் கொண்டுதான் வழங்கப்படும். இவ்வினத்தில் திருமதி விஜயா என்பவர் சமர்ப்பித்த ஆவணங்களுடன் அளித்த பத்திர ஆவணங்கள் அவரது வழியிலோ அல்லது அவரது கணவர் வழியிலோ சம்பந்தப்படாதது ஆகும். எனவே, அவற்றைக் கருத்தில் கொள்ள இயலாது எனவும், மனுதாரர் இந்து ஜங்கம் வகுப்பைச் சார்ந்தவர் என்பதை நிருபணம் செய்யும் வகையில் ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காததால் திருமதி எம். விஜயாவின் மகள் அருள்ஜோதி என்பவர் இந்து ஜங்கம் வகுப்பைச் சேர்ந்தவர் என ஜாதிச் சான்று வழங்க இயலாது என்ற விவரம் மனுதாரர் திருமதி விஜயா என்பவருக்கு இவ்வலுவலக உத்தரவு கடித எண். B519/2000/சி3, நாள் 8.11.2000ம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரருடன் மற்றும் பலர் இந்து-ஜங்கம் சாதிச் சான்றிதழ் வாங்கக் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளனர். மனுதாரருக்கு தவறுதலாக ஜங்கம் என்று ஜாதிச் சான்றிதழ் வழங்கும்பட்சத்தில் மற்ற அனைவருக்கும் ஜங்கம் என ஜாதிச் சான்று வழங்க அவசியம் ஏற்படும். அவ்வாறு ஒரு பகுதியினருக்குத் தவறுதலாக வழங்கப்படும் ஜாதிச் சான்றிதழ் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கண்ட மற்ற பிற சமுதாயத்தினரை மிகவும் பாதிப்புகள் ஏற்படுத்தும். திரு. தட்சிணாமூர்த்தி என்பவர் சமீபகாலமாகத் தானும், தன்னைச் சேர்ந்தவர்களும் இந்து ஜங்கம் ஜாதியைச் சார்ந்தவர்கள் எனத் தெரிவித்துக் கொண்டு ஒரு சங்கம் அமைத்துக் கொண்டு, தவறான வழியில் போராட்டம் நடத்தி வருகிறார். 1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் பள்ளிச் சான்றிதழில் ஜங்கம் என்ற ஜாதியைக் குறிப்பிடாமலும், மேலும் ஜாதிச் சான்றிதழ் ஏதும் பெறாமலும் திடீரென கயநல நோக்குடன் இந்து ஜங்கம் என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைக் கோருகிறார். இவரிடம் 1950ம் வருடத்திற்கு முந்தைய ஆவணங்கள் ஏதும் இல்லாமலும், 1989ம் வருடத்திற்கு முன்பு இந்த ஜாதியை எங்கும் குறிப்பிடாமல் திடீரென இந்த ஜாதிச் சான்றிதழ் கோருவது எவ்விதத்திலும் உண்மை ஆகாது. எனவே, மனுதாரரின் கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (உத்தமபாளையம் வட்டாட்சியரின் கடித எண். ந.க.எண். 9814/2000/சி3, நாள் 15.9.2000).

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
1.	13614	திருமதி. வள்ளி, க/பெ. அண்ணாதுரை, தாமரைக்குளம்.	கரும்புக்கு வெள்ள நிவாரணம்-98ல் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
1998-99 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளச் சேத கரும்பு பயிருக்கு நிவாரண நிதி ஒதுக்கப்படவில்லை. எனவே, நிவாரணம் வழங்கப்படவில்லை. (தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரின் கடித எண். தி1/1243/99, நாள் 31.10.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
2.	13413	சி.எம். வேதநாயகம், பேரூர் கழகச் செயலாளர், உறவேவிலஸ், தேனி மாவட்டம்.	கம்பம்-இரவங்கலார், கம்பர்-மேல்மணலார் வழித்தடப் பேருந்துகளை நடை இழப்பின்றியும், தேனி-இரவங்கலா வழித்தடத்தில் பேருந்து வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
கம்பம்-இரவங்கலார், கம்பம்-மேல்மணலார் வழித்தடப் பேருந்துகளை நடை தடையின்றியும், உரிய கால அட்டவணைப்படி அனைத்து நடைகளையும் இயக்க உரிய மேல் நடவடிக்கை எடுத்து அதன்படி இயங்குகின்றது. மேலும், தேனி-இரவங்கலா வழித்தடத்தில் ஒரு தனி நடை பேருந்து வசதி உள்ளது. (திண்டுக்கல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரைக் கோட்டம்-4) நிர்வாக இயக்குநரின் கடித எண். வணிகம்/திவ-4/2163, நாள் 29.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
3.	13444	சி. வெள்ளையம்மாள், தலைமை ஆசிரியை, காந்தி வித்யாலையம் துவக்கப்பள்ளி, கீழ வடகரை-பெருமாள்புரம், பெரியகுளம் தாலுக்கா, தேனி மாவட்டம்.	பெரியகுளம், காந்தி வித்யாலயம் துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி சி. வெள்ளையம்மாள எனபவருக்கு ஊதியம் வழங்காமை குறித்தும், பள்ளிக்கு அங்கீகாரம் வழங்குவது குறித்தும்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கீழ வடகரை கிராமம் உட்கடை பெருமாள்புரத்திலுள்ள, காந்தி வித்யாலயம் என்ற ஆரம்பப் பள்ளி, திண்டுக்கல் மாவட்டம், மாவட்டக் கல்வி அலுவலரால் அங்கீகாரம் வழங்கப்பட்டு நடைபெற்று வந்தது. அப்பள்ளியானது கட்டிடத்தின் அபாயகரமான நிலையைக் கருத்தில் கொண்டு இப்பள்ளிக்கு வழங்கப்பட்ட நிரந்தர அங்கீகாரமும் இரத்து செய்யப்பட்டது. 5.6.1990 முதல் பள்ளி மூடப்பட்டு விட்டது. இதுகுறித்து மதுரை முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் ந.க.எண். 24067/அ3/86, நாள் 7.1.91ன் நகல் இணைக்கப்பட்டு பள்ளிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தினை இரத்து செய்தது செல்லாது என நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, நீதிமன்றத்தால் அங்கீகாரம் இரத்து செய்த ஆணையை நீக்கம் செய்யப்பட்டு விட்டது. நீதிமன்ற ஆணையில் சொல்லப்பட்டவாறு அங்கீகாரத்தை இரத்து செய்ய விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டியுளளது. இது சார்பானக் கோப்பு இயக்குநர் அலகளிடமிருந்தும், நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்டு உள்ளது. இப்பள்ளியை நேரில் பார்வையிட்டு பள்ளியின் செயல்பாடு, கட்டிட நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அங்கீகாரத்தை இரத்து செய்வது குறித்து மீண்டும் புதியதாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுளளது. இப்பள்ளியின் நிர்வாக விஷயமாக இப்பள்ளியின முன்னாள் தலைமை ஆசிரியர் எனக் கூறிக்கொள்ளும் திரு. ராஜ் என்ற கலைநிதிக்கும், முன்னாள் நிர்வாகி திரு. டி. எபினேசர் என்பவருக்கும் இடையே பெரியகுளம் டி.மு.கோட்டில ஓ.எஸ்.எண். 215/86ன்படி வழக்கு நடைபெற்று வந்ததாக கூறப்பட்டுளளது. ஆயினும், இவ்வழக்கானது 14.2.96ல் முடிந்து விட்டது. இவ்வழக்குச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஓ.எஸ்.எண். 215/86-ஆணையினை நடைமுறைப்படுத்தப்பட்ட கூடாது என இரண்டு மாதங்களுக்கு மட்டும் கால அவகாசம் தரப்பட்டது.	துறை அளித்த பதில் படித்துப பதிவு செய்யப்பட்டது.

நிர்வாக மாறறம் சிக்கலில் இருந்தபடியால், ஆசிரியர்களுக்கு நேரடி மான்ய முறை ஊதியம் தலைமை ஆசிரியை திருமதி சி. வெள்ளையம்மாள் மூலம் (கற்பிப்பு மானியம்) வழங்க பெரியகுளம் மாவட்ட கல்வி அலுவலர் தமது ந.க.எண். 16110/85/பி12, நாள் 16.8.85-ன்படி ஆணையிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மதுரை முதன்மைக் கல்வி அலுவலர் தமது மு.மு.எண். 22213/அ3/89, நாள் 18.8.89 ஆணையின்படி, புதிய நிர்வாகம் அறிமுகப்படுத்தும் வரை தென்கரை சரக பள்ளித் துணை ஆய்வாளரையே, தனி அலுவலராக கிடைப் பொறுப்புகளை ஏற்று நடத்த ஆணையிட்டுள்ளார். எனவே, தலைமை ஆசிரியையிடமிருந்து பொறுப்புகளை கல்வித் துறையே ஏற்றுக் கொண்டு விட்டது. மேலும், மதுரை முதன்மைக் கல்வி அலுவலரின் மு.மு.எண். 3856/அ2/90, நாள் 13.2.90-ன்படி பெருமாள்புரம் காந்தி வித்யாலயம் நிர்வாகப் பொறுப்பினை பெரியகுளம் உதவித் தொடக்கக் கல்வி அலுவலருக்கு வழங்கியும் ஆணையிடப்பட்டது. ஆசிரியர்களுக்கு ஊதியம் மட்டும் தலைமை ஆசிரியர் மூலமாக வழங்கப்பட்டதேயன்றி, இப்பள்ளி தலைமையாசிரியரால் 28.2.89 வரை பராமரிக்கப்பட்டது என்று கூறுவது உண்மைக்கு முரணானது. பள்ளியில் திருமதி சி. வெள்ளையம்மாள் ஒரு பணியாளரே தவிர நிர்வாகி அல்ல என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பள்ளி அமைந்துள்ள இடம் சம்பந்தமான பிரச்சினை தனிப்பட்ட சொத்துப் பிரச்சினையாகும். கல்வித்துறை இப்பிரச்சினையில் தலையிட இயலாது. மேற்கூறியவாறு நிர்வாகப் பிரச்சினை தொடர்ந்ததால் ஆசிரியர்களின் ஊதியம் மற்றும் பிற நலன்களுக்காக கல்வித் துறை அலுவலகத்திடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பெரியகுளம் மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண். 16110/அ2/89, நாள் 20.4.89-ன்படி பள்ளி அங்கீகாரம் பெற்ற இடத்தில் கூட்டம் அபாயகரமானதாக இருந்ததை முன்னிட்டு, வேறு பாதுகாப்பான இடத்தில் பள்ளியினை நடத்த 1989-90-ம் கல்வியாண்டில் தலைமையாசிரியருக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாணையினை, தலைமையாசிரியர் புறக்கணித்து, இதே இடத்திலுள்ள பள்ளி நடக்குமென தொடர்ந்து அபாயகரமான இடத்திலேயே பள்ளியினை நடத்தினார். எனினும், பெரியகுளம், மாவட்டக் கல்வி அலுவலரின் அறிவுரையின்படி, இரு ஆசிரியைகளும், பெரும்பாலான மாணவர்களுடன் ஊர் மக்கள் ஏறுபாடு செய்திருந்த பிறிதொரு இடத்தில் பள்ளியினை நடத்தி வந்தனர். நிர்வாக மாற்றம் சிக்கலில் இருந்ததால், பெரியகுளம், உதவி தொடக்கக் கல்வி அலுவலர், தற்காலிகமாக பள்ளியினை நடத்த ஏறபாடு செய்தார். இவ்விடத்திலும் பள்ளி சுமுகமாக நடை பெறவில்லை. 1990-91 ஆம் ஆண்டில் பள்ளி திறக்கும்போது, இவ்வூர் மக்கள் தங்கள் குழந்தைகளை இப்பள்ளி தலைமையாசிரியரை மாறறினால்தான் அனுப்புவோம் என்றும், சத்துணவு வழங்க அனுமதிப்போம் என்றும் கூறியதால், இவ்வூரில் சட்டம் ஒழுங்கு பாதிக்கும் நிலை ஏறபட்டது. இதனடிப்படையிலும்தான் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர், இப்பள்ளி சுமுகமாக நடைபெற வாய்ப்பே இல்லாததால், இப்பள்ளியின் நிரந்தர அங்கீகாரத்தை திரும்பப் பெற பரிந்துரை செய்தார். தலைமையாசிரியர் கூறியிருப்பதுபோல் வேறு காரணங்கள் இல்லை.

பள்ளியின் அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்டபடியால், அப்பள்ளியில் பணியாறறிக் கொண்டிருந்த ஆசிரியைகளுக்கு பணிப்பாதுகாப்பு வழங்கி, அவர்களை கீழ்க்கண்டவாறு பள்ளிகளுக்கு மாறறம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

1. திருமதி சி. வெள்ளையம்மாள், தலைமை ஆசிரியை - புத்தூர் கலா நிலையம் நடுநிலைப்பள்ளி, பெரியகுளம்.
2. திரு. வி. பகபதி, இடைநிலை ஆசிரியர் - பாரதியார் நடுநிலைப் பள்ளி, பெரியகுளம்.
3. திரு. பி. ராஜாராம், இடைநிலை ஆசிரியர் - ஸ்ரீமுத்துச்சாமி நாயுடு துவக்கப்பள்ளி, அழகர்நாயக்கன்பட்டி

இதில் தலைமை ஆசிரியை திருமதி சி. வெள்ளையம்மாள் எனபவர் மட்டும், பெரியகுளம் புத்தூர் கலா நிலைய நடுநிலைப் பள்ளியில் பணியில் சேரவில்லை. மற்ற இருவரும் பள்ளியில் பணியில் சேர்ந்து விட்டனர். திருமதி சி. வெள்ளையம்மாள் இம்மாறறம் குறித்து தொடர்ந்த வழக்கு, நிட் மனு. 16612/90, நாள் 12.10.90-ஐ நீதிமனறத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. நிட அப்பில் மனு. 1112/90-ம் நாள 14.11.20ல் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மற்ற இரு ஆசிரியைகளும் பணியில் சேர்ந்து விட்டனர். திருமதி சி. வெள்ளையம்மாள மட்டும் பணிப் பாதுகாப்பு அடிப்படையில் பணியில் சேர ஆணை வழங்கப்பட்ட பெரியகுளம் புத்தூர் கலா நிலைய நடுநிலைப் பள்ளியில் சேராததால் இவருக்கு சம்பளம் வழங்க இயலவில்லை. இதுகுறித்து திருமதி சி. வெள்ளையம்மாள நீதிமனறங்களில் பலவேறு வழக்குகளைத் தொடர்ந்திருந்ததால், வழக்கின் முடிவுக்கு காத்திருக்க நேரிட்டதும் காலதாமதத்திறகுக் காரணமாகும். திருமதி சி வெள்ளையம்மாள சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த நிட மனு. 3947/92, நாள 5.9.95-ன்படி வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் மேற்படி நிட்மனு பகுதி அனுமதிக்கப்பட்டு, அப்பள்ளி அங்கீகாரம் இரத்து செய்த ஆணை திரும்பப் பெறப்பட்டது. இனி அங்கீகாரத்தை ரத்து செய்ய புதிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே ஆணையில் கல்வி முகமை குறித்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாணைகள் அடங்கிய கோப்புகள் நீதிமனறத்திலும் இயக்குநர் அலுவலகத்திலிருந்தும தற்போதுதான் பெறப்பட்டுள்ளன.

இப்பொருள் குறித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன

1) கல்வி முகமை குறித்து முடிவான ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகே பள்ளியின் அங்கீகாரம் குறித்து நடவடிக்கை எடுக்க இயலும். கல்வி முகமை குறித்து வழக்கு தொடுத்த திரு. பெருமாள் செட்டியார், முன்னாள் கல்வி முகமை திரு. எபினேசர் வாரிசுதார்களாக சம்மன் கூட்டிக் கொள்ளும் திருமதி கமீலா ஆகிய அனைவரும் இறந்து விட்டனர். எனவே, கல்வி முகமை உரிமை கோரி இதுவரை யாரும் முன்வரவில்லை. எனவே கல்வி முகமை குறித்து நீதிமன்றத்தால் தக்க பின் வாரிசினை ஆணை பெறப்பட்டு அது கல்வித் துறைக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகே, இப்பள்ளியின் அங்கீகாரம் குறித்து முடிவெடுக்க இயலும். 2) கல்வி முகமை குறித்து தலைமை ஆசிரியர் திருமதி சி. வெள்ளையம்மாள என்பவரின் கணவர் திரு. ராஜ் என்ற கலைநிதியும் வழக்கு தொடுத்தவர்களில் ஒருவர். அவர் தற்போது வருவாய்த் துறையில் துணைத் தாசில்தாராகப் பணிபுரிகிறார். அரசு அலுவலர் தனியார் பள்ளி முகமையாகப் பணியாறற இயலாது. எனவே, இதுகுறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. 3) திருமதி சி. வெள்ளையம்மாள என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட நிட் அப்பில் 2233, 2234/99 மற்றும் 18718 மற்றும் 18720/99 ஆகியவைகளைத் தாக்கல் செய்யும்போது தேனி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரை பிரதிவாதியாக சேர்க்கவில்லை மேலும் அங்கீகாரம் தொடர்பாக பள்ளியில் பணியாறறும் ஆசிரியர் வழக்கு தொட இயலாது. இருப்பினும் நீதிமனற அப்பீலில் பள்ளியின் அங்கீகாரம் குறித்து நீதிமன்ற ஆணையின் நகலை அனுப்பி வைக்க, பெரியகுளம் கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவைகளைப் பெற்ற பிறகு அங்கீகாரம் இரத்து செய்வதா, இவையா என்ற நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.
4) பள்ளிக் கல்வி முகமை சிக்கலில் இருப்பதால், தலைமையாசிரியை திருமதி சி. வெள்ளையம்மாள எனபவரின் ஊதியத்தைக் கோரிப் பெற

உரிய நபர் இல்லை. கல்வி முகமை பொறுப்பேற்றதும், இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது கல்வித் துறையால் பணிப் பாதுகாப்பு வழங்கப்பட்டு, பிறிதொரு பள்ளிக்கு மாற்றப்பட்ட திருமதி சி. வெள்ளையம்மாள் என்பவர் பணியில் சேராததால் அவர் மீது கல்வித் துறையில் உரிய நடவடிக்கை (நிதி உதவி பெறும் பள்ளி ஆசிரியர் நடத்தை விதிகள்) மேற்கொள்ளப்பட்ட பிறகு, அதன் இறுதி முடிவிற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (தேனி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் கடித எண். 3940/அ3/2000, நாள் 15.9.2000).	

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
4.	13529	கா. தமிழரசி, க/பெ. நாகராஜ், வார்டு 2, மந்தையம்மன் கோவில் தெரு, நாராயணத்தேவன்பட்டி, கம்பம்.	இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு நலத்திட்ட உதவி வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
அரசாணை (நிலை) எண். 166, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 14.5.97ன்படி, குழந்தைக்கு மூன்று வயது ஆவதற்குள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனுதாரர் மனுவில் அவரது குழந்தை 9.6.1994ம் ஆண்டு பிறந்தது எனவும், தனது அறியாமையாலும், அபலைப் பெண் என்பதாலும் மேற்காணும் திட்டத்தில் குழந்தையைச் சேர்ப்பதற்கு விண்ணப்பம் கொடுத்து அவ்விண்ணப்ப மனுவினை ஊராட்சி ஒன்றியத்தில் திருப்பிக் கொடுத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, மேற்காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி மூன்று வயது முடிவடைந்த நிலையில் இவரது குழந்தையை இத்திட்டத்தில் சேர்க்க இயலாது. இவர் ஆதரவற்றவர் எனவும், கணவனால் கைவிடப்பட்ட அபலைப் பெண்ணாக இருப்பதாலும், கருணை அடிப்படையில் உதவி செய்ய வேண்டுமென்று திரும்பவும் மனு செய்துள்ளார். இவருக்கு அரசு விதியினைத் தளர்த்தி உதவி செய்ய சட்டத்தில் இடமில்லை. எனவே இவரது மனு நிராகரிக்கப்படுகிறது. (தேனி மாவட்டச் சமூக நல அலுவலரின் கடித எண். 1566/2000/அ3. நாள் 6.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
5.	13534	முத்துமாணிக்கம், த/பெ. கருளி செட்டியார், 48ஏ8/வா.31, புது நகராட்சித் தெரு, கம்பம்.	இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனடைய வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
அரசாணை (நிலை) எண். 166, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 14.5.97ன்படி, குழந்தைக்கு மூன்று வயது ஆவதற்குள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும். இரண்டாவது குழந்தையை பதிவு செய்யும்போது முதல் குழந்தையையும் பதிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் அவரது இரண்டாவது குழந்தை 6.11.1994 அன்று பிறந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் 16.3.98 அன்றுதான் உரிய ஆவணங்களுடன் கம்பம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு மனு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவரின் கூற்றுப்படி அக்குழந்தைக்கு 6.11.97லேயே மூன்று வயது முடிவடைந்து விட்டது. மூன்று வயது முடிவடைந்த நிலையில் இவரது குழந்தைகளை இத்திட்டத்தில் சேர்க்க இயலாது. ஆனால், இவர் கண பார்வையற்றவர் என்பதால் கருணை அடிப்படையில் தனது குழந்தைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் உதவி கிடைக்க ஆவன செய்யும்படி கேட்டுள்ளார். இவருக்கு அரசு விதியைத் தளர்த்தி உதவி செய்ய சட்டத்தில் இடமில்லை. எனவே இவரது மனு நிராகரிக்கப்படுகிறது. (தேனி மாவட்டச் சமூக நல அலுவலரின் கடித எண். 1566/2000/அ3. நாள் 6.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
6.	13528	வி.எம். முத்துச்சாமி, த/பெ. வெள்ளையத்தேவர், 1031, காந்தி நகர், கம்பம்.	புதிய குடும்ப அட்டை கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டது. புதிய குடும்ப அட்டை அச்சடிப்பதற்காக மனுதாரரின் மனு மதுரை எல்காட் நிறுவனத்திற்கு 4.12.2000 அன்று அனுப்பப்பட்டுள்ளது. (தேனி மாவட்ட வழங்கல் அலுவலரின் கடித எண். 37014/2000/எம்.1. நாள் 6.12.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7.	13896	வ.உ.சி. நகர், அண்ணாநகர், சொக்கநாதபுரம் மற்றும் சின்னமனூர், அனைத்து பொதுமக்கள், சின்னமனூர்.	சின்னமனூர் நகராட்சி 15 மற்றும் 17வது வார்டுகளில் உள்ள வீடுகளில் மேல் செல்லும் மின்சார வயர்களை வேறு வழியாக மாற்றி அமைக்கக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மனுவில் கூறப்பட்டுள்ள சின்னமனூர் நகராட்சி, 15 மற்றும் 17வது வார்டுகளில் உள்ள வீடுகளில் மேல் செல்லும் மின்பாதை மேற்படி வீடுகள் கட்டப்படுவதற்கு முன்பு அமைக்கப்பட்டது. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த மின்பாதையின் கீழ், மின் விதிகளுக்கு புறம்பாக வீடுகள் கட்டப்பட்டுள்ளது. எனவே மேற்படி மின் பாதையை வேறு வழியாக மாற்றி அமைப்பதாயின் அவ்வாறு மாற்றி அமைப்பதற்கு ஏற்படும் செலவுத் தொகையை மனுதாரர்கள் வாரியத்திற்கு செலுத்தினால் வீடுகளுக்கு மேல் செல்லும் மின்பாதை வேறு வழியில் மாற்றியமைக்கப்படும். (மே.பா.பொறி/தே.மி.ப.வ./ உ.செ.பொ./மே.& ம.தொ.அ./உ.வரைகோ.சின./ப.எண். 60, 2000, நாள் 9.10.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8.	13411	சி.எம். வேதநாயகம், பேரூர் கழகச் செயலாளர், உறவேவீஸ்.	உறவேவீஸ் நகரியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தருவது மற்றும் மதுக் கடை இடத்தினை இடம் மாற்றுவது தொடர்பாக.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
உறவேவீஸ் நகரியத்தின் மக்கள் தொகை 3382 ஆகும். அரசின் விதிப்படி 30000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நிலையில் இம்மக்கள் தொகையினை உள்ளடக்கி க.புதுப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. இக்கிராமத்தில் அரசின் விதிப்படி 5000ம் மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. இந்நகரியத்தில் உள்ள பெரும்பான்மை மக்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள். இவர்களின் நலம் பேணும் வகையில் அனைத்து வசதிகள் உள்ளடக்கி தேயிலைத் தோட்ட நிர்வாகத்தினர் கட்டுப்பாட்டில் கார்டன் மருத்துவமனை ஒன்றும் உள்ளது. எனவே, இச்சூழலில் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. மதுபானக் கடையை வேறு இடத்தில் அமைக்க உரிமதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அதனடிப்படையில் உரிமதாரர் வேறு இடம் தேடிக்கொண்டு இருக்கிறார். விரைவில் வேறு இடத்திற்குக் கடை மாற்றப்படும். (தேனி மாவட்ட துணை இயக்குநர். (சு.ப.)-ன் கடித எண். 1. ந.க.எண். 7308/அ6/2000, நாள் 25.10.2000. 2) ந.க.எண். 53181/2000/ப்பி1/நாள் 24.10.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9.	13415	எம். பாண்டியன், தலைவர், தேனி மாவட்ட விவசாயிகள் சங்கம், 86/1, தெற்குத் தெரு, தென்கரை, பெரியகுளம்.	சண்முகா நதி திட்டப் பணிகள் டிசம்பர் 2000-ல் முடித்துத் தரக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
இத்திட்டப் பணிகள் தலைப்பிடப் பணிகளில் (Head works) 85% முடிவுற்றன. மீதமுள்ள பணிகள் வரும் 31.12.2000 தேதிக்குள் முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கால்வாய் பணிகளில் கால்வாயின் மொத்த நீளம் 18.13 கி.மீ. இதில் 12 கி.மீ. தூரத்திற்கு குறுக்கு கட்ட வேலைகள் முழுமையாக முடிக்கப்பட்டு விட்டன. 65% பணிகள் முடிவுற்றன. கால்வாயின் முழுப் பணிகளும் வரும் 31-3-2001ல் முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் ஆர்ஜிதம் செய்ததின் கன்னி வாய்க்கால் (Distributory) வேலை துவங்கப்படும். (கும்பம், பெரியாறு அணை சிறப்புக் கோட்டச் செயற் பொறியாளரின் கடித எண். 151எம்/வப/உ.பொ./கோ.4/2000, நாள் 20.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10.	13900	ரெங்கசமுத்திரம் பஞ்சாயத்து, சக்கிலிச்சிகுளம் கண்மாய் நீர்ப்பாசன ஆயக்கட்டுச் சங்கம், தேனி மாவட்டம்.	ஆத்தங்கரைப்பட்டி அணையிலிருந்து சக்கிலிச்சிக்குளம் மற்றும் 4 கண்மாய்கள் மராமத்துச் செய்யக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
துரைச்சாமிபுரம் அணைக்கட்டிலிருந்து ஆத்தங்கரைபட்டி வாய்க்கால் 12.90 கி.மீ. தூரத்திற்கு தூர் வாரி மராமத்துப் பணிகள் செய்யவும், அணையில் மணல் தலை மதகுக்குள் படியாதபடி மணல் தடுப்புகளும், மடக்கு திருகுகட்டர் அமைக்கவும் மதிப்பீடுகள் ஒப்பளிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. (பெரியகுளம் வடிநில உபகோட்டம் (நீ.வ.ஆ.) (பொ.ப.து.மஞ்சளார்) செயற் பொறியாளரின் கடித எண். 486/2000/இ.வ.அ.1.கோ.26., நாள் 16.9.2000.	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11.	14109	வி. சுப்புராயலு, தலைவர், நாட்டுப்புற விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம், 8/1, பகவதி அம்மன் கோயில் சாலை, அரண்மனைத் தெரு, வடகரை, பெரியகுளம்.	அழகு பாறை அணைக்கால்-மராமத்துப் பணிகள் (வெள்ளச் சேதங்கள்) செய்வது சம்பந்தமாக.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
நடப்பு ஆண்டில் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் பணி மேற்கொள்ளப்படவில்லை. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் பணி மேற்கொள்ளப்படும். (பெரியகுளம் வடிநில உபகோட்டம் (நீ.வ.ஆ.) (பொ.ப.து. மஞ்சளார்) செயற்பொறியாளரின் கடித எண். 4793/2000/கோ.26, நாள் 8.11.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
12.	13883	என்.எஸ்.டி. செல்லச்சாமி, தலைவர், சித்தார்பட்டி ஊராட்சி, ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், தேனி மாவட்டம்.	சித்தார்பட்டி மந்தைக்குளம் ஓடையைக் கடக்கும் நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டிக் கொடுக்கக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மனுவில் குறிப்பிட்டுள்ள பாலமானது ஆண்டிப்பட்டி (நெ) உட்கோட்டத்திலுள்ள இதர மாவட்டச் சாலையான சித்தார்பட்டி சாலை கி.மீ. 0/10-லுள்ள ஒடு பாலமாகும். இந்த ஒடு பாலத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை வருடாந்திரப் பராமரிப்பு மதிப்பீட்டில் சாலைப் பணியாளர்களைக் கொண்டு சீர் செய்து முடிக்கப்படும். (தேனி மாவட்ட (நெ.ஊ.ப.து.) கோட்டப் பொறியாளரின் கடித எண். 119/2000/இவ அ2, நாள் 21.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13.	14014	இலவு-விவசாயிகள் சங்கம், போடி	போடிநாயக்கனூரிலிருந்து மங்களக் கோம்பை வரை சாலை அமைத்துத் தர வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
இச்சாலை பஞ்சாயத்துச் சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 5.00 கி.மீ. ஆகும். தற்சமயம் இச்சாலை மண் சாலையாக உள்ளது. ஏற்கனவே தார் தளமாக உள்ள சாலையைப் பராமரிப்பதுதான் இத்துறையைச் சார்ந்த பணியாகும். புதியதாக சாலை அமைப்பது என்பது நெடுஞ்சாலைத்துறையின் ஒரு பிரிவான கிராமச் சாலையைச் சார்ந்ததாகும். ஆகவே, இச்சாலையை மேம்பாடு செய்ய 1 கி.மீ-கு 20 இலட்சம் வீதம் 5 கி.மீட்டருக்கு ரூ. 100 இலட்சங்கள் தேவைப்படும். மேற்படி பணியை ஊரக வளர்ச்சி நிதி மூலம் செயல்படுத்தலாம் (தேனி மாவட்ட (நெ.ஊ.ப.து.) கோட்டப் பொறியாளரின் கடித எண் ந.க.எண். 108/2000/இநி வ, நாள் 24.10.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
14.	14015	இலவு-விவசாயிகள் சங்கம், போடி.	போடிநாயக்கனூரிலிருந்து முத்துக கோம்பை வரை சாலை அமைத்துத் தர வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
இச்சாலையின் மொத்த நீளம் 6.00 கி.மீ. இச்சாலை தேசிய நெடுஞ்சாலை 49 நீட்சி கி.மீ. 92/2-ல் பிரிந்து செல்கின்றது. முதல் 2 கி.மீ. நகராட்சிக்குட்பட்ட தரமான தார்ச் சாலையாகும். அதன்பின் கொட்டக்குடி ஆறு குறுக்கிடுகின்றது. அடுத்த 4.00 கி.மீ. பரூசாயத்துச் சாலையாகும். இச்சாலை தற்சமயம் மண்சாலையாக உள்ளது. ஏற்கனவே தார்த்தளமாக உள்ள சாலையை பராமரிப்பதுதான் இத்துறையைச் சார்ந்த பணியாகும். புதியதாகச் சாலை அமைப்பது என்பது நெடுஞ்சாலைத் துறையின் ஒரு பிரிவான கிராமச் சாலையைச் சார்ந்ததாகும். ஆகவே, இச்சாலையை மேம்பாடு செய்ய 1 கி.மீட்டருக்கு 20 லட்சம் வீதம் 4. கி.மீட்டருக்கு 80 லட்சமும், கொட்டக்குடி ஆற்றில் குறுக்குப் பாலம் கட்ட ரூ. 100 லட்சமும், ஆக மொத்தம் 180 லட்சங்கள் தேவைப்படும். மேற்படி பணியை ஊரக வளர்ச்சி நிதி மூலம் செயல்படுத்தலாம். (தேனி மாவட்ட (நெ.ஊ.ப.து.) கோட்டப் பொறியாளரின் கடித எண். ந.க.எண்.108/2000/இநி வ, நாள் 24.10.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
15.	13535	கஸ்தூரி முருகன், 28வது வார்டு பொதுமக்கள் சார்பாக, கம்பம்-626516. உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம்.	பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையை அகலப்படுத்தக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மனுதாரர் கோரும் இடம் காவலர் குடியிருப்புக்கு சொந்தமானது என்பதால் அகலப்படுத்த இயலாது. (உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியரின் கடித எண். ந.க. 3827/2000/இ/நாள் 4.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
16.	13429	அழகர்சாமி, பி.ஏ., பி.எல்., 36, பாலி நாயுடு தெரு, அல்லிநகரம், தேனி.	பாலிநாயுடு தெருவில் தண்ணீர் சரியாக கிடைக்கக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மனுதாரர் வசிக்கும் பாலி தெருவிற்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தேவையான தண்ணீர் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பகுதி கடைசி பகுதியாக இருப்பதால் நிறைந்த அழுத்தத்துடன் அதிகாலையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. (தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் கடித எண். 4744/2000/இ2, நாள் 20.10.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
17.	13791	சின்னம்மாள், கலா, தலைவிகள், பெண்கள் முன்னேற்ற ஆதார மையம், காந்தி நகர், அல்லிநகரம்.	காந்தி நகர்ப் பகுதிக்கு கழிப்பிட வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
தேனி-அல்லிநகரம் நகராட்சி வார்டு எண். 12, காந்தி நகர் பொதுமக்கள் தங்கள் பகுதியில் ஒரு நவீன கழிப்பிடம் கட்டித் தர வேண்டும் என பெண்கள் முன்னேற்ற ஆதார மையத்தின் சார்பாக மனு கொடுத்துள்ளனர். மேற்படி காந்தி நகர்ப் பகுதி அருகில் ஒரு நவீன கழிப்பிடம் இருக்கிறது. மேலும் காந்தி நகருக்கு அருகிலுள்ள குறிஞ்சி நகர் பகுதியிலும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தற்போது நவீன கழிப்பிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. எனவே, காந்தி நகர் பகுதி மக்களுக்கு அருகிலுள்ள மேற்படி இரண்டு கழிப்பிடங்கள் உபயோகமாக இருக்கிறது. மேலும், மேற்படி காந்தி நகர் பகுதியில் ஏதாவது அரசு திட்டத்தின்கீழ் நிதிவசதிக்கேற்ப ஒரு நவீன கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் கடித எண். ந.க.எண்.6022/2000/இ1, நாள் 29.11.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18.	13432	பெ. பரமசிவம், 47/33, பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, கும்பம்.	பாலம் பழுதானதை சரி செய்யக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
சுவர்ண ஜெயந்தி திட்டத்தின்கீழ் இவ்வேலையினை செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி செய்ய நடவடிக்கையில் உள்ளது. விரைவில் முடிக்கப்படும். (கும்பம் நகராட்சி ஆணையாளரின் கடித எண். 9299/2000/இ1, நாள் 20.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19.	13895	கெ.எம். அச்சுதன், பி.ஏ., தாளாளர், என்.எஸ்.கே.பி. மேல்நிலைப் பள்ளி, கூடலூர்.	ஆக்கிரப்பினை அகற்றக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மனுதாரர் ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரும் இடமானது வேளாண்மை விதைப் பண்ணைக்கு சொந்தமானது ஆகும். உத்தமபாளையம் வேளாண்மை உதவி இயக்குநருடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அது ஆக்கிரமிப்பை அகற்ற முன் வரும் பட்சத்தில் உதவி செய்யலாம். (உத்தமபாளையம் வட்டாட்சியரின் கடித எண். ந.க. 13325/2000/பி1, நாள் 15.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
20.	13435	கதிரையாகவுடர், த/பெ. நந்தகோபால் கவுடர், போ. மீனாட்சிபுரம் அஞ்சல், போடிநாயக்கனூர் வட்டம்.	மைய அரசு மற்றும் மாநில அரசின் சுதந்திர போராட்ட வீரர் ஓய்வூதியம் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
மனுதாரர் திரு. சு.ந. கதிரையாகவுடர் என்பவர் மைய அரசு மற்றும் மாநில அரசின் ஓய்வூதியம் கோரி மனு செய்தது தொடர்பாக மனுதாரரை 15.2.2000 அன்று தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சீராய்வுக் குழுக் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் ஆஜராகுமாறு கோரப்பட்டதில் மனுதாரர் மைய அரசிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் மாநில அரசிற்கு சககைதிச் சான்று வழங்கக் கூடிய திரு. எஸ். சண்முகசுந்தரம் என்பவர் நேர்மையற்ற முறையில் சக கைதிச்சான்று வழங்கியுள்ளார் எனவும், அவரை விசாரணை செய்து எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை அரசுக்குத் தெரிவிக்குமாறு அரசு கடித எண். 12692/2000-1, பொது (அ.ஓ4) துறை, நாள் 30.3.2000 என்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திரு சண்முகசுந்தரம் என்பவர் 7.8.2000 அன்று மாவட்ட சீராய்வுக் குழுவில் இருந்து தான் ராஜினாமா செய்வதாகத் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இது மேலும் சந்தேகத்தை வலுப்படுத்த திரு. எஸ். சண்முகசுந்தரம் என்பவரால் வழங்கப்பட்ட சககைதிச்சான்றுகள் அனைத்தும் மெய்தானா என்பதை விசாரணை செய்து அறிக்கை அனுப்பக் கோரி உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட ஆவணத்தில் மாநில அரசிற்கு மட்டும் ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். மத்திய அரசிற்கு தற்போது அரசு விதிமுறைகளின்படி ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணத்தில் அவருடைய வயதை நிருபிக்கும் வகையில் குடும்ப அட்டையின் நகல் இணைத்துள்ளார். குடும்ப அட்டையில் மனுதாரருக்கு 1998ல் 77தான் பூர்த்தியடைந்துள்ளது. ஆனால் விடுதலை வீரர் ஓய்வூதியம் பெறுவதற்கு 15.10.88 அன்று மனுதாரருக்கு 70 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். ஆனால் இந்நேர்வில் மனுதாரருக்கு 15.10.88 அன்று வயது 67 தான் பூர்த்தியடைந்துள்ளது. இந்நேர்வில் மனுதாரர் மைய அரசிற்கு அரசு விதிமுறைகளின்படி ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை, மாநில அரசிற்கு திரு. சண்முகசுந்தரம் என்பவரிடம் சககைதிச் சான்று பெற்று சமர்ப்பித்துள்ளதால் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து முடிவான அறிக்கை வரப் பெற்றவுடன்தான் அரசிற்கு முடிவான அறிக்கை அனுப்ப முடியும். மேலும் தேனி மாவட்டத்தில் சீராய்வுக் குழுவிற்கு இரு உறுப்பினர்கள் மற்றும் சக கைதிச் சான்று வழங்கக் கூடிய திரு. சண்முகசுந்தரம் ஆகியோர் கூட்டத்திற்கு வர முடியாததால் சீராய்வுக் குழுக் கூட்டம் நடத்த இயலாத தழ்நிலையை இவ்வலுவலக கடித எண். 7130/99/ஜி3, நாள் 2.11.2000 அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் மனுதாரர் மைய அரசிற்கு அரசு விதிமுறைகளின்படி ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் அவற்றின்மீது தகுந்த ஆணைகள் பிறப்பிக்கலாம். மாநில அரசிற்கு வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றவுடன் முடிவான அறிக்கை அனுப்பப்படும். (தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண். அ.ஓ.கி.ப.எ.71/99, நாள் 8.12.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
21.	13680	தலைவர், 24, மனை தெலுங்குச் செட்டியார் சங்கம், ஓக்கமநாயக்கன்பட்டி, போடிநாயக்கனூர்.	போடி டவுன் டி.எஸ்.எண். 671/1 மற்றும் 2, 11 சென்ட நிலத்திற்கு பட்டா கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
பட்டா வழங்கக் கோரும் நிலம், போடி நாயக்கனூர் நகரளவைக் கணக்குகளில் பின்வருமாறு தாக்கலாகி உள்ளது. நகரளவை எண். பரப்பு வகைப்பாடு 617/1 25140 ச.அ. நகராட்சிப் பள்ளி 617/2 7703 ச.அ. ரோடு. 24 மனை தெலுங்குச் செட்டியார் சமூகத்தினர் நகரளவை எண். 617/1ல் 4400 சதுரடியும், நகரளவை எண். 617/2ல் 1326 சதுரடியும், ஆக மொத்தம் 5726 சதுரடி அல்லது 11 சென்ட் நிலத்தை அனுபோகம் செய்து வருகின்றனர். இந்த நிலங்கள் நகரளவைக் கணக்குகளின்படி நகராட்சிப்பள்ளி மற்றும் ரோடு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால், வகைப்பாடு மாற்றம் செய்து நில ஒப்படை வழங்குவதற்காக இவ்வலுவலக ந.க.எண். 8071/98, அ3, நாள் 23.12.1999ன்படி வகைப்பாடு மாற்ற முன்மொழிவுகள் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், சென்னை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களுக்குத் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கோப்பு எண். ந.க. 45606/98/அ1) அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டதும், மேற்குறிப்பிட்ட நிலத்திற்கு தலைவர்-24 மனை தெலுங்கு செட்டியார்கள் உறவின்முறை, ஓக்கமநாயக்கன்பட்டி, போடிநாயக்கனூர் என்ற பெயரில் பட்டா வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.(போடிநாயக்கனூர் வட்டாட்சியரின் கடித எண். 8071/98/அ3, நாள் 5.12.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
22.	13679	கே. முருகன், எம்.காம், தலைவர், குறவன் முன்னேற்றச் சங்கம், போடிநாயக்கனூர்.	70 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
போடிநாயக்கனூர் கிராமத்திற்கு வடக்கும், கிழக்கும் நஞ்சைப் புலமாக உள்ளதால் வீட்டுமனைக்கு நிலம் எடுக்க சாத்தியமில்லை. மேற்கு பக்கமும், தென் பக்கமும் புஞ்சையாக உள்ளது. மேற்படி போடி நகரில் ஜன நெருக்கடி காரணமாக புஞ்சை நிலங்கள் சதுர அடிக்கணக்கில் அதிக விலைக்கு வீட்டடியாக தனியார்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, போடிநாயக்கனூரில் நிலம் தேர்வு செய்வதற்கு அரசு வழங்கும் நட்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு நிலம் வழங்க நில உரிமையாளர்கள் முன்வர தயங்குகிறார்கள். மனுதாரரை அணுகி நிலம் தருவதற்கு யாரேனும் உள்ளார்களா எனக் கோரியதற்கு மனுதாரர் தான் யாரையும் அணுகவில்லையென்றும், ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமதான் நில உரிமையாளரை அணுகி பட்டா வழங்க வேண்டும் என்றும், தான் யாரையும் அணுகி நிலம் பெற முடியாது எனத் தெரிவிக்கிறார். இந்நிலையில் மேற்படி நபர்களுக்கு நிலம் தேர்வு செய்து பட்டா வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (பெரியகுளம் தனி வட்டாட்சியர் (ஆதிந)-ன் கடித எண். ந.க.1318/2000/அ, நாள் 29.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
1)	(2)	(3)	(4)
23.	14094	திரு. பழனிச்சாமி, செயலாளர், ஜெயமங்கலம், பெரியகுளம் வட்டம்.	ஆதிதிராவிட மாணவிகளுக்கு விடுதி திட்டத்தின்கீழ் பயனடையக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
தனிநபர் நேரடிப் பேச்சு வார்த்தையின்மூலம் இடம் தேர்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (பெரியகுளம் தனி வட்டாட்சியர் (ஆதிந)-ன் கடித எண். 1398/2000/அ, நாள் 29.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
24.	13441	சங்கரதாஸ், த/பெ. திருமலைச்சாமி, திருமலாபுரம், போடிநாயக்கனூர் வட்டம்.	நலிவுற்ற கலைஞர் நிவாரண நிதி வழங்கக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
அரசாணை எண். 223, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் (பண-2) துறை, நாள் 14.7.2000-ன்படி, 500 நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதம் ரூ. 500 வீதம் 1.4.1999 முதல் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மேற்கொண்ட 500 நலிவுற்ற கலைஞர்களில் திரு. சங்கரதாஸ் (வ.எண். 391-ல்) இடம் பெற்றுள்ளார். (போடிநாயக்கனூர் வட்டாட்சியரின் கடித எண். ந.க. 2179/99/அ5, நாள் 3.11.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
25.	13530	ப. சுருளிவேல், தவில் கலைஞர், க.37, வார்டு-13, ஆண்டித்தேவர் சந்து, சின்னமனூர்.	நலிவுற்ற கலைஞர் ஓய்வூதியம்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
அரசாணை எண். 223, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் (பண-2) துறை, நாள் 14.7.2000-ன்படி, 500 நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதம் ரூ. 500 வீதம் 1.4.1999 முதல் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மேற்கொண்ட 500 நலிவுற்ற கலைஞர்களில் திரு. சுருளிவேல் (வ.எண். 395-ல்) இடம் பெறுள்ளார். (உத்தமபாளையம் வட்டாட்சியரின் கடித எண். 10576/2000/சி3, நாள் 11.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
26.	13433	அ. சரவணன், த/பெ. ரா. அழகிரி, பட்டாளம்மன் கோவில் தெரு, சுக்காங்கல்பட்டி அஞ்சல், உத்தமபாளையம் தாலுக்கா.	1. பஸ் நிறுத்தத்தில் நிழற்குடை அமைக்கக் கோருதல். 2. மயானம் செல்லும் பாதையில் ரோடு அமைக்கக் கோருதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
1. பஸ் நிறுத்தத்தில் நிழற்குடை அமைப்பதற்கு அரசிடமிருந்து மான்யம் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2. மயானம் செல்லும் பாதையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்குப் பாதை அமைத்தல், கழிவு நீர் அகற்றுவதற்கும் அரசு மான்யம் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஓடைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண். ந.க.எண். 421/2000, நாள் 3.8.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
27.	13889	தலைவர், கிராம பொது நிர்வாகக் கமிட்டி, வெள்ளையம்மாள்புரம், உத்தமபாளையம் வட்டம்.	வெள்ளையம்மாள்புரம் கிராமத்தைச் சுற்றியுள்ள ஓடைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றி வெள்ள அபாயத்தைத் தடுக்க வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
ஓடைப்பட்டி பேரூராட்சி வெள்ளையம்மாள்புரத்திற்கு தெற்கே உள்ள ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய்த் துறை மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஆக்கிரமிப்புகள் முழுவதும் அகற்றப்பட்டவுடன் பேரூராட்சி மூலம் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஓடைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண். ந.க.எண். 421/2000, நாள் 2.11.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
28.	13890	கிராம பொது நிர்வாகக் கமிட்டி, வெள்ளையம்மாள்புரம் அஞ்சல், உத்தமபாளையம் வட்டம்.	வெள்ளையம்மாள்புரம் கிராமத்திற்கு மிகவும் அத்தியாவசியமான சாலை வசதி வேண்டுதல் சம்பந்தமாக

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
1) வெள்ளையம்மாள்புரம் கிராமத்திலிருந்து விவசாயிகள் போக்குவரத்திற்கான மருசுளாறு அடிவாரம் வரை சாலை அமைத்துக் கொடுக்கவும், 2) வெள்ளையம்மாள்புரத்திலிருந்து அப்பிபட்டி இணைப்புச் சாலையும் அமைத்துக் கொடுக்கவும், ஊராட்சி ஒன்றிய எல்லையும் வருவதால் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாடு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். 3) வெள்ளையம்மாள்புரம் மூர்த்திநாயக்கன்பட்டி சாலை அமைப்பதற்கு அரசு மானியம் பெறு வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 4) வெள்ளையம்மாள்புரம் சின்னகரடு மேல்நிலைப் பள்ளிக்குப் போகும் தார்ச்சாலை அமைப்பதற்கு நெடுஞ்சாலை துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 5) வெள்ளையம்மாள்புரம் கிராமத்திற்கு சமத்துவ மயானத்திற்கு தார்ச்சாலை அமைப்பதற்கு வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஒடைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண். ந.க.எண். 421/2000, நாள் 18.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
29.	13902	ஏ. ராஜப்பா மற்றும் பொதுமக்கள், தலைவர், திருவள்ளுவர் காலனி.	போஸ்டாபீஸ் தெரு மற்றும் கே.எம்.நகர் தார்ச்சாலை, வடிகால் வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
உத்தமபாளையம் பேரூராட்சிப் பகுதியில் போஸ்ட் ஆபிஸ் தெரு கே.எம்.நகர், மற்றும் திருவள்ளுவர் காலனி அமைந்துள்ள இடம் இரண்டுபுறமும் ஓடை அமைந்துள்ள இடம். மேலகாட்டு மழை நீர் ஓடை வழியாக ஊருக்குள் வரக்கூடிய பகுதியாக உள்ளது. எனவே, போஸ்டாபீஸ் தெருவில் இரண்டு புறமும் பெரிய வடிகால் கட்டி அதன் பின்பு தார்ச்சாலை அமைக்கக் கூடிய நிலையில் உள்ளது. மேலும் ஓடைப்புறம்போக்கில் வீடுகள் குப்பைக் கிடங்குகள் அதிகம் உள்ளதால் அதை அகற்றி சாக்கடை மற்றும் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை சுமார் ரூ. 3.50 இலட்சம் தேவைப்படுவதால் வரும் நிதியாண்டில் வரும் நிதியில் பணிகள் செய்திட ஆவன செய்யப்படும். மேலும் கே.எம்.நகருக்கு குடிநீர் வசதிக்கு தற்போது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி துவங்க உள்ளது. (உத்தமபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண். 986/2000, நாள் 28.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
30.	13523	எஸ். தவச்செல்வம், ஒன்றிய மாணவர் அணிச் செயலாளர், மறுமலர்ச்சி தி.மு.க., ஊத்துப்பட்டி, முத்துலாபுரம் அஞ்சல்.	முத்துலாபுரம்-ஊத்துப்பட்டி இணைப்புச் சாலை அமைத்தல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
ஊத்துப்பட்டியிலிருந்து முத்துலாபுரம் செல்லும் குறுக்குப் பாதையிலுள்ள ஓடையின் வடக்குப் பக்கம் 2000-2001ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தில் ரூ. 2.00 லட்சம் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் கட்டி 172 மீட்டர் நீளம் மண்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதி ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஊராட்சி மூலம் சர்வே செய்ய பணம் கட்டப்பட்டுள்ளது. விரைவில் சர்வே முடிந்தவுடன் பாக்கி வேலையை செய்து முடிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. (சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கடித எண். 1405/2000/அ5, நாள் 14.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
31.	13505	ஜெ. தேசிங்குராஜன், ஒன்றியக் குழுத் தலைவர், ஊராட்சி ஒன்றியம், க.மயிலாடும்பாறை.	கடமலைக்குண்டு-வெளிமலை வரை சாலை சீரமைப்பு.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
கடமலைக்குண்டு-வெள்ளிமலைச் சாலை மொத்தம் 41 கி.மீ. நீளமுள்ள (கி.மீ. 0/0-41/0) இச்சாலை வருவாய்த்துறை ஆவணங்களின்படி வண்டிப்பாதை என உள்ளது. மேலும், இச்சாலை தற்போது வனத் துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தச் சாலையை மேம்பாடு செய்யும்பொருட்டு அரசு வனம் மற்றும் மீன்வளத் துறையினரின் 3.10.83ம் நாளிட்ட 1210 எண் ஆணையின்படி ரூ. 260 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெற்று மேம்பாடு செய்யப்பட்டது. (இதில் வைகை நதியில் கி.மீ. 0.2ல் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுதலும் அடங்கும்) இப்பணிகள் அனைத்தும் மேற்கு மலைத்தொடர் அபிவிருத்திக் கோட்டம் (நெகிப) பெரியகுளம் மூலம் செய்யப்பட்டு, பின்னர் தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண். 2, மதுரை மூலம் முடித்து வனத் துறைக்கு 31.5.93ல் முழுவதுமாக ஒப்படைப்பு செய்ய கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் வனத் துறையினர் ஏற்றுக் கொள்ளவில்லை. சாலை ஒப்படைக்க வேண்டுமானால் 28.10.90 மற்றும் 2.11.90 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட கடுமையான மழையினால் சாலைக்கு ஏற்பட்ட பாதிப்பினை சரிசெய்து கொடுக்க தெரிவித்தனர். இதனை சரி செய்ய ரூ. 152 இலட்சம் வரை ஆகும் என்பதாலும், இத்தொகை வனத் துறையினரிடம் இருந்து கிடைக்கப் பெறாததால் மேற்கண்ட பணிகள் ஏதும் நடைபெறவில்லை. பின்னர் இந்தச் சாலை கி.மீ. 0/0-39/0 வரை 1987-88 ஆம் ஆண்டு மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், சாலை சீரமைக்கப்பட்டது. அதன் பின்னர் 1994-95 ஆம் ஆண்டு ஐவஉறர் வேலைவாய்ப்புத் திட்ட நிதியிலிருந்து ரூ. 35 இலட்சம் செலவில் கி.மீ. 0/0-39/0 வரை க. மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியம் மூலம் செப்பனிடப்பட்டுள்ளது. இச்சாலை தற்போது வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் அமைந்துள்ளது. தற்போது மேற்படி சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் இல்லாததால் பஸ் போக்குவரத்து வெகுவாகக் குறைந்து விட்டது. இந்தச் சாலையைச் செப்பனிட தோராயமாக ரூ. 215.00 இலட்சம் செலவாகும். எனவே, இதற்கான நிதியை ஒதுக்கித் தரவும், மேற்படிச் சாலையை வனத் துறையிலிருந்து நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரவும், முதல் கட்டமாக நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் உள்ள கி.மீ. 0/0-20/0 உள்ள பகுதிக்கு சாலைப் பணிகள் செய்திட ரூ. 126 இலட்சம் அனுமதியளிக்கக் கேட்டு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 7.7.2000ம் நாளிட்ட ந.க.எண். 26679/2000, சி2, எண். கடிதத்தில் நெடுஞ்சாலைத் துறை அரசு செயலாளருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி வரப் பெறவில்லை. பின்னர் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 19.7.2000ம் நாளிட்ட ந.க. 26857/2000/கே7 எண் கடிதத்தில் மேற்படி சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொள்ள அனுமதிக்கும்படியும், நிதி ஒதுக்கீடு பெற்று சாலையை பராமரிப்புச் செய்து கொள்ள அனுமதிக்கும்படி வனத் துறைச் செயலாளருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி இதுவரை வரப் பெறவில்லை. மேலும், வனம் மற்றும் நெடுஞ்சாலை கிராமப் பணித் துறைச் செயலாளருக்கு 14.11.2000ம் நாளிட்ட ந.க. 26857/2000/கே7 எண். கடிதத்தில் நினைவூட்டும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, வனத் துறையிடமிருந்து அனுமதி பெறப்பட்டவுடனும், நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையிலிருந்து நிதி ஒதுக்கீடும் வரப்பெற்றபின் இந்தச் சாலை போர்க் கால அடிப்படையில் செப்பனிடப்படும். (க.மயிலாடும்பாறையின் ஆணையாளரின் கடித எண். 3068/2000/அ3/நாள் 25.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
32.	13506	ஜெ. தேசிங்குராஜன், ஒன்றியப் பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றியம், க.மயிலாடும்பாறை.	வருசநாடு முதல் பிளவக்கல் வரை காமராஜபுரம் வழி சாலை வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
க. மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் வருசநாடு முதல் காமராஜபுரம் வரையிலுள்ள சாலை ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளது. இச்சாலையில் 1999-2000 ஆம் ஆண்டு வேலைக்கு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலை போடப்பட்டு, நல்ல நிலையில் உள்ளது. காமராஜபுரத்தில் இருந்து பிளவக்கல் அணை வழியாக ராஜபாளையம் செல்லும் ஒற்றையடி பாதை தேனி மாவட்டமும், விருதுநகர் மாவட்டமும் சேர்ந்த பகுதி, இச்சாலையில் காமராஜபுரம் முதல் 2 கி.மீ. தூரமும் ஒற்றையடி பாதையாக உள்ளது. இது வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் சாலை அமைக்க முடியாமல் காமராஜபுரம் முதல் பிளவக்கல் அணை வரை (2 கி.மீ. வரை) இவ்வொன்றியப் பகுதியின் எல்லை வரை செல்லும் ஒற்றையடி பாதை வனத் துறை கட்டுப்பாட்டில் இருப்பதால், பொதுமக்களின் நலன் மிச்சப்படுத்தும் நோக்குடன் புதிய சாலை அமைக்க அனுமதி வழங்கக் கேட்டு இவ்வலுவலக ந.க. 3068/2000/அ3, நாள் 25.9.2000ல் தேனி மாவட்ட வனத்துறை அலுவலர்க்கு கடிதம் எழுதப்பட்டு வருகிறது. வனத்துறை அனுமதி கிடைக்கப் பெற்றதும், க. மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய பகுதியில் சாலை அமைக்கப்படாத 2 கி.மீட்டரிலும் சாலை அமைத்துக் கொடுக்கப்படும். (க.மயிலாடும்பாறை ஆணையாளரின் கடித எண். 3068/2000/அ3, நாள் 25.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
33.	13507	ஜெ. தேசிங்குராஜன், ஒன்றியப் பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றியம், க.மயிலாடும்பாறை.	முத்தாலம்பாறை முதல் எம்.கல்லுப்பட்டி வரை சாலை சீரமைப்பு வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
க. மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, மயிலாடும்பாறை முதல் எம்.கல்லுப்பட்டி சாலையில் 10 கி.மீ. தூரம் (தாழையூத்து மலைப் பகுதி வரை) உள்ள சாலை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்சமயம் இச்சாலை பழுதடைந்துள்ளதால் பழுதுபார்த்துக் கொடுக்கக் கேட்டு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை உதவி கோட்டப் பொறியாளர் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க. 3068/2000/அ3, நாள் 25.9.2000ல் கடிதம் எழுதப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மயிலாடும்பாறை-எம் கல்லுப்பட்டி சாலையில் தேனி மாவட்டம், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய எல்லை வரை செல்லும் சுமார் 4 கி.மீ. சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால், பொதுமக்களின் நலன் கருதியும், போக்குவரத்து தூரத்தை மிச்சப்படுத்தும் நோக்குடன் 4 கி.மீட்டரில் புதிய சாலை அமைக்க அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.3068/2000/அ3, நாள் 25.9.2000ல் கடிதம் எழுதப்பட்டுள்ளது. வனத்துறையின் அனுமதி கிடைக்கப்பெறறதும், க. மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சாலை அமைத்துக் கொடுக்கப்படும். (க.மயிலாடும்பாறை ஆணையாளரின் கடித எண். 3068/2000/அ3, நாள் 25.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
34.	13512	முன்னாள் உதவிப் பெருந்தலைவர், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்.	மயிலாடும்பாறை-எம்.கல்லுப்பட்டி சாலை வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
க. மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, மயிலாடும்பாறை முதல் எம்.கல்லுப்பட்டி சாலையில் 10 கி.மீ. தூரம் (தாழையூத்து மலைப் பகுதி வரை) உள்ள சாலை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்சமயம் இச்சாலை பழுதடைந்துள்ளதால் பழுதுபார்த்துக் கொடுக்கக் கேட்டு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை உதவி கோட்டப் பொறியாளர் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க. 3068/2000/அ3, நாள் 25.9.2000ல் கடிதம் எழுதப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மயிலாடும்பாறை-எம் கல்லுப்பட்டி சாலையில் தேனி மாவட்டம், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய எல்லை வரை செல்லும் சுமார் 4 கி.மீ. சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால், பொதுமக்களின் நலன் கருதியும், போக்குவரத்து தூரத்தை மிச்சப்படுத்தும் நோக்குடன் 4 கி.மீட்டரில் புதிய சாலை அமைக்க அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.3068/2000/அ3, நாள் 25.9.2000ல் கடிதம் எழுதப்பட்டுள்ளது. வனத்துறையின் அனுமதி கிடைக்கப்பெற்றதும், க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சாலை அமைத்துக் கொடுக்கப்படும். (க.மயிலாடும்பாறை ஆணையாளரின் கடித எண். 3068/2000/அ3, நாள் 25.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வ.எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
35.	13880	தலைவர், எஸ்.டி. செல்லச்சாமி, ஊராட்சி மன்றம், சித்தார்பட்டி.	சித்தார்பட்டி கிராமத்தில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத் துறை கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுதல்.

துறையின் பதில்	குழுவின் பரிந்துரை / கருத்துரை
(5)	(6)
ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், சித்தார்பட்டி ஊராட்சியில் சித்தார்பட்டி கிராமத்தில் சுமார் 30 சலவைத் தொழிலாளர் குடும்பங்கள் உள்ளன. இங்குள்ள சலவைத் தொழிலாளர்கள் சித்தார்பட்டி எஸ்.கதிர்நரசிங்காபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள 800 குடும்பங்களுக்கு சலவை செய்ய சுமார் 20 கி.மீ. தூரமுள்ள வைகை அணைக்கு சென்று சலவை செய்து வருகிறார்கள். இந்நிலையில் சித்தார்பட்டியில் சலவை செய்ய புதிய அடிகுழாய் அமைத்து பெரிய தொட்டி கட்டி நீர் நிரப்பி சலவை கற்கள அமைத்து சலவை துறை கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டியுள்ளார்கள். சித்தார்பட்டி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. மேலும் சலவைத்துறை கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக மாவட்ட பிறப்பட்டோர் நலத் துறையின் மூலம் நேரில் கேட்கப்பட்டது. அதுசமயம் நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லையென தெரிவித்துள்ளார்கள். சலவைத் துறை கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லை. மேலும் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலும் செய்ய நிதி வசதி இல்லை. எனவே நிதி ஒதுக்கீடு இல்லாததால் சலவைத்துறை கட்டிடம் கட்ட வாய்ப்பில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கடித எண். 3339/2000/அ5, நாள் 19.9.2000).	துறை அளித்த பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

மெ. இராசாராமன்
செயலாளர்.